[illegible] 06 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | பங்குனி 13 | (26.3.94) | சனிக்கிழமை | ஓசை 36

## மாணவர் மதிய உணவு முத்திரைக் கொடுப்பனவு

கடந்த ஆண்டு ஜுலை, செப்டம்பர் மாதங்களுக்குரிய மாணவர் மதிய உணவு முத்திரை கொடுப்பனவுகள் வழங்க அனுமதி கிடைத்துள்ளது. யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு விரைவில் இம் மாதங்களுக்குரிய உணவு முத்திரை கொடுப்பனவு வழங்கப்படும் என செயலகம் அறிவித்துள்ளது. இதற்குரிய பணம் விரைவில் ஒதுக்கீடு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை 93 ஆம் ஆண்டுக்கான மதிய உணவு முத்திரைக்குரிய கொடுப்பனவாக பல இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது திறைசேரி விரைவில் கட்டு நிதியை வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(நி.ம)

# டி.பியின் இனவாதப் போக்கிற்கு தேர்தல் முடிவுகள் பலத்த அடி!

## இனப் பிரச்சினைக்கு ராணுவ தீர்வும் நிராகரிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி டி.பி விஜேதுங்காவின் இனவாதப் போக்கிற்கு தென் மாகாண சபைத் தேர்தல் முடிவு பலத்த அடியாக அமைந்துள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தென் மாகாணத்தில் இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்விற்கு அனுமதி கோரிய டி.பி. விஜேதுங்காவின் கோரிக்கை சிங்கள மக்களால் நிராகரிக்கப்பட்டிருப்பதாகவும் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

தென் மாகாணசபை குறித்து கருத்து வெளியிட்ட பி.எ.லி அரசு இனி துரிதமாக செயற்பட்டாலன்றி மக்களின் இந்த எதிர்ப்பு ஜனாதிபதி தேர்தலிலும், பொதுத்தேர்தலிலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் எனக் குறிப்பிட்டது.

ஆண்டின் இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தலின் நிலைமையை கட்டியங்கூறப் போகும் தேர்தலாக நடைபெற்ற தென் மாகாண சபை தேர்தலில் ஐ.தே.கவிற்கு பெரும் விபத்தாக முடிந்து விட்டது. கடந்த டிசம்பரில் இம்மாகாணசபையை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்காக அரசு இச் சபையைக் கலைத்தது.

இத்தேர்தல் முடிவுகள் 17 வருடங்களாக எதிரணியாக இருந்த கட்சிக்கு உற்சாகம் தருவதாகவுள்ளது. எதிரணி சார்பில் பிரசாரத்தை முன்னின்று நடத்திய சந்திரிகா குமாரணதுங்கவிற்கு இது தனிப்பட்ட முறையிலான வெற்றி சந்திரிகா இது குறித்து கருத்து தெரிவிக்கையில் இனவாதம் பலன் தராது என்பதை இத்தேர்தல் முடிவு காட்டுவதாகக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவியும் இவரின் தாயுமான சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பொறுப்புகளை சந்திரிக்காவே ஏற்கலாம் அரசின் தோல்விகளுக்கு அதன் பொருளாதாரக் கொள்கைகளும் காரணமாகின்றன என பி.பி.ஸி மேலும் தெரிவித்தது அரசு தோல்வி குறித்து இதுவரை மௌனமாகவே இருப்பதாகவும் பி.பி.ஸி. குறிப்பிட்டது.

## எதிர்பாராத அமோக வெற்றியை மக்கள் எமக்கு அளித்தனர்

-சந்திரிகா

(கொழும்பு)

தென்மாகாணசபைவெற்றி சற்றும் எதிர்பார்க்கவில்லை என மேல் மாகாண முதல்

## திருமலையில் புலிகள் தாக்கு இரு பொலிசார் பலி

(திருமலை)

திருமலை உப்புவெளிப் பகுதியில் இரு சிறீலங்காப் பொலிசார் விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் கொல்லப்பட்டனர். சிசர்வ் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த இவர்கள் மாலை ஆறு மணிமுதல் காலை ஆறு மணிவரை காவல் கடமையில் ஈடுபடுவதற்கு துவரங்காடு பொலிஸ் நிலையத்திற்கு சென்று கொண்டிருந்தனர் இதன் போதே இவர்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகினர்.

## ஹெலி துப்பாக்கிச் சூடு கடற்படைரோந்து அதிகரிப்பு

(வடமராட்சி)

வல்வை வல்லைக் குடியிருப்புக்கள் மீது உலங்கு வானூர்தி ஒன்று இரவு நேரம் பரவலாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. நேற்று முன்தினமிரவு 11-15 மணியளவில் இப்பகுதிக்கு வந்த இவ் உலங்கு வானூர்தி தொடர்சியாக வேட்டுக்களை தீர்த்த வண்ணம் இருந்தது.

இப்பகுதிகள் மீது உலங்கு வானூர்தி தாக்கி கொண்டிருந்தபோது, பொம்பர் விமானங்கள் இரண்டு பலாலிக்குச் சென்று திரும்பி வந்து மேற்குறித்த குடியிருப்புக்கள் மீது வட்டமிட்டு நோட்டமிட்டது

இது இவ்வாறிருக்க வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் கடந்த சில தினங்களாக கடற்படையினரின் விசைப்படகு ரோந்துச் சேவை அதிகரித்த வண்ணமுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சில சமயங்களில் அக்கடற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த வங்கிக் கிளை வாடிக்கையாளர் பிரச்சினை குறித்த பேச்சுவார்த்தை

(யாழ்ப்பாணம்)

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து இயங்கும் வங்கிக் கிளைகளின் வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் இவ் வாடிக்கையாளர்களுக்குரிய நட்ட ஈட்டுத் தொகைகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் வங்கி நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படவுள்ளது

[illegible] கும் சங்கம் மேற்படி முயற்சியில் இறங்கியுள்ளது. நேற்று மாலை நடைபெற்ற மேற்படி சங்கத்தின் கூட்டத்தில் மேற்படி முயற்சி மேற்கொள்வது குறித்து தீர்மானிக்கப்பட்டது.

வங்கிகளின் ஆவணங்கள் அழிந்து விட்டதாகக் கூறியும், வேறு காரணங்கள் பல கூறியும் வாடிக்கையாளர்களுக்கான சேவையை குறிப்பிட்ட வங்கிகள் தொடர்ந்[illegible]

## விமானம் நோட்டம்

(குருநகர்)

நேற்று சிறிலங்கா வான்படையைச் சேர்ந்த 'அவ்ரோ' விமானமொன்று முற்பகல் 0.45 மணியில் இருந்து 11 மணிவரை குடாநாட்டின் கரையோரம் மற்றும் யாழ்நகரம் புறநகர் பகுதிகளையும் பல தடவைகள் சுற்றி நோட்டமிட்டுச் சென்றது.

இதேவேளை நேற்று முன்தினம் நள்ளிரவு வலிகாமம் வடக்குப் பகுதி மீதும் உலங்கு வானூர்தி ஒன்று மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் 50 கலிபர் தாக்குதலை நடத்தியது.

(21)

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் நேற்று முழுவதும் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் இன்று சனி காலை 5 மணிக்கு நீக்கப்பட்டது.

...னைகள் தொடர்பாகவும் இவ் வாடிக்கையாளர்களுக்குரிய நட்ட ஈட்டுத் தொகைகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் வங்கி நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படவுள்ளது.

யாழ் மாவட்ட அரச, தனியார் வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர் நலன்[illegible] ...பட்டது.

வங்கிகளின் ஆவணங்கள் அழிந்து விட்டதாகக் கூறியும், வேறு காரணங்கள் பலவும் கூறியும் வாடிக்கையாளர்களுக்கான சேவையை குறிப்பிட்ட வங்கிகள் தொடர்ந்தும் தாமதப்படுத்தி வருவதாக கூறப்படுகிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கல்விகழக நியமனம் பெற்ற ஆசிரியர்கள் சந்திக்கவும்

கல்விக்கழக ஆசிரியர்களாக நியமனம் பெற்று யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்ட பாடசாலையில் கடமையாற்றும் சகல ஆசிரியர்களையும் 30. 03. 94 புதன்கிழமை பி. ப. 2. 30 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியிற் சந்திக்குமாறு பிரதிக்கல்விப்பணிப்பாளர் இ. புவேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார். வருகை தரும் போது உங்கள் பாடசாலைகளில் நியமனம் பெற்று வேலையில் இருந்து தாமகவே விலகிக்கொண்டவர்களின் பெயர்களையும் அதிபரிடம் இருந்து பெற்றுக்கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

## தபால்கள் இறக்க தாமதம் ஆகலாம்

'லாதுவ' கப்பலில் யாழ் குடாவுக்கு எடுத்து வரப்பட்ட தபால் பொதிகள் இன்னமும் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு கரைக்கு வந்து சேரவில்லை.

இத்தபால் பொதிகள் அனைத்தும் கப்பலில் உள்ள பொருள்களுக்கு இடையே சிக்கிக் கொண்டதனாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. தபால் பொதிகளை எடுத்துச் செல்வதற்காக யாழ் தபால் திணைக்கள ஊழியர்கள் நேற்று துறைமுகம் வந்த போதிலும் தபாலை எடுத்துச் செல்ல முடியாததினால் தபால் பொதிகளை ஏற்றுவதற்காக வந்த லொறி எண்ணெய் பரல்களை ஏற்றிச் சென்றது.

கப்பலில் உள்ள தபால்கள் அடுத்த வாரமளவிலேயே கப்பலில் இருந்து இறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (யோ)

## சிங்கள மீனவர்களுக்கு விடுதலைப்புலிகள் உதவினர்

### தத்தளித்த மீனவர் கரைசேர்ந்தனர்

(கொழும்பு)

கடலில் தத்தளித்த இரு சிங்கள மீனவர்கள் விடுதலைப் புலிகளின் உதவியுடன் தமது வீடு சென்றுள்ளனர் என தெரிய வருகின்றது.

திருகோணமலையில் இருந்து ஆழ்கடல் மீன் பிடிக்கச் சென்ற எஸ். டி. நியால், எஸ். டி. உப்புல் தயாரத்ன என்ற மீனவர்களே இவ்வாறு புலிகளின் உதவியுடன் மீண்டும் திருகோணமலையில் உள்ள தமது வீட்டிற்கு திரும்பியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆழ்கடலில் தமது படகு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 'நரோமா' பயணிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 29ஆம் திகதி இரண்டாவது பட்டியலில் பெயர் பதியப்பட்டுள்ள பிரயாணிகள் அடுத்த மாதம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

...தோட்டை ஆகிய மாவட்டங்களில் நேற்று முழுவதும் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் இன்று சனி காலை 5 மணிக்கு நீக்கப்பட்டது.

...நடைபெற்ற தென் மாகாண சபை தேர்தலில் ஐ. தே. கவிற்கு பெரும் விபத்தாக முடிந்து விட்டது. கடந்த

## பொ. ஐ. முன்னணி 32 ஆசனங்கள் கைப்பற்றியது

(கொழும்பு)

55 உறுப்பினர்கள் கொண்ட தென்மாகாண சபையில் பொதுஜன ஐக்கிய முன்னணி 30 ஆசனங்களையும் போனசாக இரு ஆசனங்களையும் பெற்று மொத்தமாக 32 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது. ஐ தே க. 23 ஆசனங்களைப் பெற்றுள்ளது. 21 தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய தென் மாகாணத்தில் ஐ தே க. ஒரேயொரு தொகுதியில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தேர்தல் விகிதாசார முறையிலான தேர்தலாக அமைந்திருந்ததாலேயே ஐ. தே. க. 23 ஆசனங்களையாவது பெற முடிந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தென்மாகாண சபை தேர்தலில் கட்சிகள் பெற்ற வாக்கு வீதங்களின் படி பொதுஜன ஐக்கிய முன்னணி 54 சதவீதமான வாக்குகளைப் பெற்றுள்ளது. கடந்த ஒரு தசாப்த காலத்தில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்கால தேர்தல்களின் வெற்றிக்கு முன்னறிவிப்பு

### -பொதுஜன மக்கள் முன்னணி தெரிவிப்பு

தற்போதைய தென்மாகாணசபைத் தேர்தல் வெற்றி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றில் தமது அணிக்கு வெற்றியைத் தரும் என்பதை கட்டியங்கூறுவதாக பொது ஜன ஐக்கிய முன்னணி கருத்துத் தெரிவித்துள்ளது.

## கட்சி ஆதரவாளர்கள் மோதல் பலர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(கொழும்பு)

ரதிகமுவ, இக்கடுவ பொலிஸ் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் கட்சி ஆதரவாளர்களுக்கிடையில் மோதல் நடைபெற்றதாகவும் இதில் இரு கட்சிகளினதும் ஆதரவாளர்கள் காயமடைந்துள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒருகங்கிவைச் சேர்ந்தோர் கூட்டமாக சென்று வாக்களிப்பில் ஈடுபட எத்தனிக்கும் போது அதனை மற்றுமொரு குழுவினர் தடுத்து நிறுத்த முயற்சி செய்தபோது மேற்படி மோதல் நடைபெற்றதாகவும் இதில் ஐக்கிய தேசிய கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களுக்கிடையே மேற்படி மோதல்நடைபெற்றதாகவும் இரு தரப்பினரும் தற்போது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இனவாதக் கட்சி கட்டுப்பணம் இழந்தது

(கொழும்பு)

தென்மாகாணசபை தேர்தலில் புதிதாக உருவான சிங்கள இனவாதக் கட்சியான பூமி புத்திர கட்சி படுதோல்வி கண்டுள்ளது. இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட இப்புதிய கட்சி தேர்தலில் மிகக் குறைந்தளவு வாக்குகளையே பெற்று கட்டுப் பணத்தையும் இழந்துள்ளது.

1987இல் மரியாதை அணிவகுப்பொன்றில் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை துப்பாக்கியால் தாக்கிய சிறிலங்கா கடற்படைச்சிப்பாய் ரோகண டி சில்வா இக்கட்சியின் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மக்கள் எமக்கு அளித்துள்ள...

### - சந்திரிகா

(கொழும்பு)

தென்மாகாணசபைவெற்றி எமது கட்சிக்குக் கிடைக்கும் என தேர்தல் ஆரம்பத்தில் இருந்தே எனக்குத் தெரியும். ஆனால் இவ்வளவு பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெறுவோம் என்பதை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை என மேல் மாகாண முதல் அமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவு தொடர்பாக லண்டன் பி. பி. சி. சிங்கள சந்தேசிய வானொலிக்கு அளித்த பேட்டியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் இனவாதத்திற்கு தென்பகுதி மக்கள் மட்டுமன்றி முழுநாட்டு மக்களும் இரையாகவில்லை என்பதை இத் தேர்தல் முடிவு உலகிற்கு உணர்த்தியுள்ளது என்றார்.

இதேவேளை வெரித்தாஸ் சிங்களசேவைக்கு சந்திரிகா வழங்கிய பேட்டியில் ஐக்கிய தேசிய கட்சியில் உட்பிளவுகள் ஏற்பட்டு இருந்தமையினால் அக்கட்சியினால் திட்டமிட்டு வன்முறைகளில் ஈடு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரான்சிஸ்கோ தோல்வி ஜனநாயகத்தின் வெற்றி

(கொழும்பு)

விமல் பிரான்சிஸ்கோவிற்கு கிடைத்த தோல்வியானது ஜனநாயகத்திற்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தென்மாகாண சபைத் தேர்தலில் அப்பகுதி மக்கள் இவருக்கு கொடுத்த பெரியதொரு தண்டனையே இது என கருதப்பட முடியும். தனது நலனுக்காக ஜனநாயக அமைப்பு முறையினை கேலி செய்த இவருக்கு ஜனநாயக ரீதியில் கிடைத்த ஓர் பெரும் தண்டனையே இதுவாகும்.

இவரது மாவட்டமான அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சென்ற மாகாண சபை தேர்தலின் போது ஐ. தே. கட்சி நான்கு தேர்தல் தொகுதிகளிலும் வெற்றி பெற்றிருந்த போதிலும் இம்முறை அந்த நான்கு தொகுதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பெரும் பிரச்சினையின்றி தேர்தல் முடிவுற்றது

### - தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

தென்மாகாணசபை தேர்தல் பெரும் பிரச்சினைகள் ஏதுமின்றி நடந்து முடிந்துள்ளது என தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா நேற்று அறிவித்தார். பொலிஸ் மா அதிபருக்கு அவர் பாராட்டையும் தெரிவித்துள்ளார்.

## ஐ. ஐ. தே. முன்னணி 5 உறுப்பினர் வெற்றி

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் அபேட்சகரில் ஐந்து பேர் மாகாணசபைக்கு தெரிவு செய்யப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தொடங்கொடவிற்கு 2,00000 மேல் அதிகப்படி

(கொழும்பு)

தென்மாகாண சபை தேர்தலில் காலி மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முதலமைச்சராக போட்டியிட்ட அமரசிறி தொடங்கொடவுக்கு ஆகக் கூடிய விருப்ப தெரிவு வாக்கு கிடைத்துள்ளது.

இரண்டு லட்சத்திற்கு அதிகமாக வாக்கு கிடைக்கப்பெற்றதாகவும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் மிதுதமா ராஜ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## வரி விளம்பரம்


### புரோயிலர் குஞ்சு விற்பனை

பிறிமா புரோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு ஓடர் கொடுத்தவர்கள் உடன் வந்து பெற்றுக் கொள்ளவும்; 'மல்லிகாபதி', சந்தை ஒழுங்கு ஒழுங்கை, மானிப்பாய். (7840)

### றெனி மூக்குக்கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்து கண்ணாடி உடன் வழங்கப்படும்; இல. 288, நாவலர் வீதி, (யாழ். தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (7844)

### தேவை

சித்திரம் வரைவதில் ஆர்வம் உடையவர்களும் எழுத்துக்களை திறம்பட எழுதக் கூடியவர்களும் தேவை;
1. இதில் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்; 2. தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும், தொடர்பு தேவன் பல் தொழில் நிறுவனம் கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். (7843)

### தேவை

வேலணை ப. நோ. கூ. சங்கத்திற்கு இரும்பு அலுமாரி தேவைப்படுகிறது. இதனை விற்க விரும்புவோர் கோணாந்தோட்ட வீதியில் அமைந்துள்ள அதன் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். (சி-8912)

### பெயரமைத்தல்: எண் ஜோதிட வெளியீடு

எவருடைய உதவியுமின்றி நீங்களே அதிர்ஷ்டகரமாக பெயரமைப்பதற்கான எந்தக் காலத்திற்கும் உதவக்கூடிய சஞ்சிகை. ஒவ்வோர் எண்களுக்குமான பலன்கள் விளக்கங்களுடன் எங்கும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. பல வாசகர்களின் நன்றி கலந்த பாராட்டுக் கடிதங்களுக்கு நன்றி. ஸ்ரீ வாணி வெளியீடு — ரூ. 25/- (7846)

### துவரம் விதை

துவரம் பருப்பு அதிக அளவு புரதச் சத்தைத் தருகிறது. வீட்டு வளவுகளில் எப்பருவத்திலும் பயிர் செய்து பயன் பெற துவரம் விதைகள் பல...


## புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம்

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான (வைரவர் கோவில்) புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிற்பாசாரியார் திரு. இ. கை. மோகன் அவர்களைக் கௌரவித்தல், பாராட்டுப் பத்திரம் வழங்கல், ஆசியுரைகள், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறும். (மு)

## இன்றைய நிகழ்வுகள்

டாக்டர் திருமதி வி. எம். கருணாகரன் ஆஸ்பத்திரி வீதி, மத்திய மருந்தக மண்டபத்தில் இன்று காலை 9.00 மணியளவில் செப்ரிசிமியா பற்றி உரைநிகழ்த்தவுள்ளார். இச்சிறப்புரை சமூக சேவையாளர்களுக்காக நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஃ ஃ

வலி தெற்கு பிரதேச சபையும் அதன் சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் முழு நிலா நாள் அறிவியற் கருத்தரங்கு இன்று பிற்பகல் 4 30 மணியளவில் கன்னாகம் பெரியமதவடி பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடு பற்றி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுடிவகலாலா உரையாற்றவுள்ளார்.

ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக சித்தமருத்துவமுதலாம்வருட மாணவர்களுக்கான வரவேற்புபசார வைபவம் சனிக்கிழமை இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது; இதில் பிரதம விருந்தினராக திரு திருமதி டாக்டர் பவாணி கலந்துகொள்ளார்கள்.

சிறப்பு விருந்தினராக யாழ்பல்கலைக் கழக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். பி. ஆர். சீமாறனும் கலந்து கொள்ளவுள்ளார். (05)

ஃ ஃ

(கொழும்புத்துறை)

யாழ். கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4மணி தொடங்கி நிலையத் தலைவர் திரு கா. கணேசதாசன் தலைமையில் பூரணைக் கருத்தரங்கு நடைபெறும்.

"அற வாழ்வு" என்ற விடயமாக திருமதி. நாச்சியார் செல்வநாயகம் எம் ஏ. (சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக் கழகம்) உரையாற்றுவார். (24)

ஃ ஃ

கொழும்புத்துறை மணலியம்பதி அருள் மிகு ஸ்ரீ கும்மன் ஐயனார் ஆலயத்தில் மாதாந்த திருவிளக்கு, சுமங்கலி பூசை இன்று சனிக்கிழமை மாலை 6.00மணிக்கு விசேட அபிஷேகம் பூசை ஆராதனையுடன் இடம் பெறும்.

திருவிளக்குப்பூசை சுமங்கலி பூசையை அடுத்து அம்பாள் வீதி வலம்வந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார். (24)

ஃ ஃ

(வடமராட்சி)

மாவட்ட மட்டத்திலான உடற்பயிற்சி விளையாட்டுப் போட்டிகள் இன்று யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் வலய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற ஆறு அணிகள் பங்கு பற்றவுள்ளன. (வோ)

ஃ ஃ


## "ஷகி சலூன்"

### லேடிஸ் அன் ஜென்ஸ்

A. G. டாஸ்

ஒரு மாத காலம் முடப்பட்டிருந்த ஸ்தாபனம் மீண்டும் ஒழுங்காக தொழில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

596/2, கே. கே. எஸ். வீதி
நாச்சிமார் கோவிலடி ஒழுங்கை வீட்டில் இடம் தெரிந்ததே!

தினமும் காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை; விடுமுறை பிரதி புதன்கிழமைகளில்;

(இ-8909) உரிமையாளர்: A G டாஸ்

நீங்கள் செலவழித்த தொகையை விட அதிக இலாபம் பெற முடியும்

## நங்கூரம்

படிப்பதன் மூலமே அது சாத்தியமாகும்




தனியார் கல்வி நிறுவனங்கள்
**Vs**
பாடசாலைகள்

இம்மாத நங்கூரம் குடாநாட்டின் சகல புத்தகசாலைகளிலும்!


## திங்கட்கிழமைகளில் பதிவு செய்யலாம்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஏற்பாட்டில் நடைபெறும் பயணிகள் கப்பற் சேவை எதிர்வரும் ஏழாம்திகதி வியாழக்கிழமை முதல் ஒவ்வொரு வியாழனன்றும் நடைபெறவுள்ளது எனவே கொழும்பு செல்வதற்காக வைத்தியர்களால் சிபார்சு செய்யப்படும் நோயாளர்கள் ஏப்ரல் நாலாம் திகதி முதல் ஒவ்வொரு திங்கட்கிழமையும் தத்தம் ஆவணங்களுடன் யாழ் அரசினர் பொது மருத்துவமனை அலுவலகத்திற்கு சமுகம் தந்து பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ் பிரதிநிதிகள் கலந்து கொள்ளார்

நாட்டின் யுத்த நிலைமை காரணமாக இன்றும் நாளையும் கல்முனையில் நடைபெறவுள்ள இலங்கை இந்து இளைஞர் பேரவையின் தேசிய மாநாட்டில்யாழ் மாவட்டப் பிரதிநிதிகள்மன்றவாரியாகக் கலந்து கொள்ள மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய குழு வென்று மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளது. யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் பொதுச் செயலர் ப. சிவயோகநாதன் தலைமையில் செல்லும் இக் குழுவினர் யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் கருத்துக்களை முன்வைக்க இருப்பதுடன் வடபகுதிப் போரினால் இன்னலுறும் மக்களுக்கான உதவிகள் பெறுவது பற்றியும், மற்றும் பல்வேறு பிரச்சினைபற்றியும் தலைமையகத்துடனும் இதர இந்து அமைப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர்.

## உலர் உணவு கொடுப்பனவுகள்

வேலணை ப நோ. கூ. சங்கம் தனது இடம் பெயர்ந்த இலவச உலர் உணவைப் பெறும் பாவனையாளரிற்கு மாசி மாதத்திற்கான இறுதி இருவார கொடுப்பனவை கடந்த வியாழன் முதல் ஆரம்பித்துள்ளது; இதில் அரிசி, மாவு, சீனி, மல்லி, தேயிலை திப்பெட்டி என்பன வழங்கப் படுகிறது. அத்துடன் மேற்படி சங்கம் தனது எரிபொருள் விற்பனை நிலையத்தினூடாக அடுத்த சுற்று மண்ணெண்ணெய் அட்டை ஒன்றுக்கு இரண்டு லீற்றர் ஒரு லீற். 25 ரூபா படி விநியோகத்தை ஆரம்பித்துள்ளது. (88)

## மண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட மக்களுக்கு 13-வது சுற்று மண்ணெய் விரைவில் பல நோக்கு கூட்டு...

## மலேரியா தடுப்பிற்கு ஒத்துழைப்பு அவசியம்

### கருத்தரங்கில் வலியுறுத்து

(பருத்தித்துறை)

மலேரியா நோய் இன்றுமக்களைப் பீடித்து பயங்கர விளைவுகளை ஏற்படுத்திவருகின்றது. எனவே மலேரியாத் தடுப்பு நடவடிக்கைகளை மிகவேகமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது இந்நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் சுகாதாரத்திணைக்களம் மட்டும் ஈடுபடுவதனால் முழுமையான பயனைப் பெற்றுவிட முடியாது மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே மலேரியாத் தடுப்பில் நாம் வெற்றி பெற முடியும். இதனாலேயே கிராமங்கள் தோறும் சுகாதாரக் குழுக்கள் அமைக்கப்பட்டு நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு புலோலி வடகிழக்கு சுகாதாரக் குழுவினால் புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்திலே நடாத்தப்பட்ட மலேரியாத்தடுப்பு கருத்தரங்கிலே உரையாற்றிய யாழ். மாவட்ட சுகாதாரப் பரிசோதகர்களின் மேற்பார்வை அதிகாரி திரு. ச. செல்வரத்தினம் குறிப்பிட்டார். பாடசாலை அதிபர் திரு. ஆறுமுக மகேசன் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கினார். பருத்தித்துறை கிராம அபிவிருத்தி அதிகாரி செல்வி நவமணி கந்தையா, புலோலி சுகாதாரப் பரிசோதகர் திரு. ச. வல்லிபுரம், கிராமசேவை அலுவலர் திரு. இ. புவேந்திரன் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். சிரமதான நடவடிக்கைகளும் இடம்பெற்றன (25)

## திருத்தம்

எமது நேற்றைய வெள்ளி மஞ்சரியில் பக்கம் - 4 'தரிசனம்' ஒரு நோக்கு எனும் கட்டுரையில்கடைசிப் பந்தியில் சிறு தவறு நேர்ந்துள்ளது.

'எந்த நிலையிலும் சோராத, துடிப்பாக இலக்கிய ஆக்கத்தில் ஈடுபடுபவர்களில் இவர் குறிப்பிடத்தக்கவர் என்று கூறலாம்'. என வாசித்துக் கொள்ளவும்.

## அடகுநகை மீளல் மேலும் நீடிப்பு

கொழும்பு மருதானையில் இயங்கும் அடகு நகைகள் மீளல் பகுதி வேலைகள் எதிர்வரும் ஜுன் மாதம் முப்பதாம் திகதி வரை நீடிக்கப்பட்டிருப்பதாக மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது


## வாழ்த்துகிறார்கள்

24-03-94 அன்று ஈழநாதம் பத்திரிகையில் பிரசுரமாகிய கிளிநொச்சி ப. தெ. வ. அ. கூ. சங்கம் வெளிக்கண்டலில் ஆரம்பித்த பனம் சீனித் தொழிற்சாலை திறப்பு விழா வாழ்த்துக்களில் தென்மராட்சி ப. தெ. வ. அ. கூ. சங்கங்களின் கொத்தணியைச் சேர்ந்த பளை ப. தெ. வ. அ. கூ. சங்க பணிப்பாளரும் பணியாளரும் கலந்து கொள்கின்றனர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

THE JEWELLERY WORKERS ASSOCIATION

பெற துவரம் விதைகள் பச்சற்றுக்களில் கிடைக்கும் இடம்- ''மிக்கிவைற்''

(சி-8917)

---

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் தெற்கு இராச வீதி வெலிங்டன் தோட்டத்திற்கு அருகில் 6 பரப்புக் காணி பிரதான வீதியில் விற்பனைக்குண்டு தொடர்பு: மா: வைகுந்தவாசன், பழைய வீதி, கோப்பாய் தெற்கு கோப்பாய். (8817)

---

**இறைச்சிக் கோழி**

இறைச்சிக் கோழிகள் எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளவும். சுவை பருனி கோழிப்பண்ணை, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-8899)

---

**COMPUTER**

**கல்வி**

**Basic Language**

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்: 26-03-94

மணி 10-30

**LOTUS 1-2-3**

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்: 26-03-94

மணி 10-30

உறுதியான கல்வியைப் பெற

**School of Business Administration**

16, 3rd Cross Street, JAFFNA.

(சி-8906)

---

இம்மாத நங்கூரம் குடாநாட்டின் சகல புத்தகசாலைகளிலும்!

**உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!!**

(சி-8916)

---

# 31-ம் நாள் அன்பின் நினைவு



அவனியில்:

10-05-1917

விண்ணில்:

25-02-1994

**அமரர் M. பிரான்சிஸ் ஜோசவ்**

(இளைப்பாறிய பொலிஸ் இன்ஸ்பெக்டர்)

**எம் கண்ணில் நீர் மல்க இன்று**
**விண்பதம் அடைந்தாய் நீயையா...**
**இறையடியில் நீயுறங்க என்றும்**
**மறையாது உன் நினைவையா...**

இவ்வுலக வாழ்வை நீத்த எம் அன்புத் தந்தை M F. ஜோசவ் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 26-03-94 சனிக்கிழமை பிற்பகல் 3 45 மணிக்கு சுச்சேரி- நல்லூர் வீதி, புனித ஆசீர்வா தப்பர் ஆலயத்தில் ஓர் இரங்கற் திருப்பலி நடைபெறும்; திருப்பலியில் பங்குகொண்டு அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சும் வண்ணம் அன்புடன் கேட்கின்றோம்.

துயரில் வருந்தும்
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

28/3, சுச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
(7779)

---

பற்றவுள்ளன. (கோ)

ஃ ஃ

கோப்பாய் தொலைக் கல்வி நிலையத்தில் பயிற்சி பெறும் சகல பயிற்சியாளர்கள் மற்றும் போதனாசிரியர்கள் அனைவரும் இன்றும் நாளையும் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரிக்கு வரும்படி சிரேஷ்ட போதனாசிரியர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஃ ஃ

அரியாலை சித்தி விநாயகர் தேவஸ்தான சிவன் கோவில் வருடாந்த உற்சவத்தின் இரதோற்சவம் இன்று நடைபெறுகிறது. இதை முன்னிட்டு பா: சர்வேஸ்வர சர்மாவினால் தினமும் இரவு 8,30 மணிக்கு நிகழ்த்தப்பட்டு வந்த திருவிளையாடற் புராண அருட்பெருரை இன்றுடன் நிறைவெய்துகிறது.

ஃ ஃ

நல்லூர் அருள்மிகு சட்டநாதர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தின் இரதோற்சவம் இன்று காலை எட்டுமணியளவில் நடைபெறவுள்ளது;

ஃ ஃ

கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் ஆலய பங்குனி உத்தர நிவாததிர சகஸ்ரசங்காபிஷேகம் இன்று நிறைவுபெறவுள்ளது;

ஃ ஃ

யாழ். இந்துக்கல்லூரியில் இயங்கும் தொலைக்கல்வி நிலையத்தில் கணித விஞ்ஞான, மாணவர்களுக்கான இறுதியாண்டுப் பரீட்சையும் உடற்கல்வி முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சையும் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது. செயல்முறையாக நடைபெறும் இப் பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட உபகரணங்களுடன் தோற்றும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

---

13-வது சுற்று மண்ணெய் விரைவில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படவுள்ளது; குடும்ப அட்டை ஒன்றிற்கு இரண்டு லீற்றர் மண்ணெய் லீற்றர் 25 ரூபா விலையில் வழங்கப்படவுள்ளது;

இதற்கென சங்கங்களுக்கான ஒதுக்கீட்டினை காசோலையைச் செலுத்தி வழங்கற் கட்டளையைப் பெற்று புனர்வாழ்வுப் பகுதி களஞ்சியத்தில் சங்கங்கள் மண்ணெய்யைப் பொறுப்பேற்று விநியோகிக்கும்படி திட்டப்பணிப்பாளர் அறிவித்துள்ளார் (22)

## கலைவாரம் முடிவுற்றது

யாழ். பல்கலைக்கழக 'கலைவார' 'விழா வைபவம் நேற்று முன்தினம் கைலாசபதி கலையரங்கில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. கலைப்பீடமாணவர்களால் கொண்டாடப்படும் கலைவாரத்தில் இருபத்தியேழு நிகழ்வுகளுக்கு வெற்றிக்கேடயங்களும் கிண்ணங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இக்கலைவார நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக கலைப்பீடாதிபதி பொ: பாலசுந்தரம்பிள்ளை கலந்துகொண்டு பரிசில்களையும் கிண்ணங்களையும் வழங்கினார். கலைவாரக் குழுத்தலைவர் மா ஐங்கரன் தலைமையில் இடம் பெற்ற இவ்வைபவத்தில் யாழ் பல்கலைக்கழக விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் தி. தியாகராசா சிறப்புரையாற்றினார்.

கலைவாரநிகழ்வில் திரு: நடராஜசுந்தரம், பேராசிரியர் அ. சண்முகதாஸ், கணிதபுள்ளிவிபரவியல் விரிவுரையாளர் செ; இளங்குமரன், அரசறிவியல் விரிவுரையாளர் இரகுநாதன் உட்பட பலரும் பங்கு பற்றினர். இறுதியாக கலை நிகழ்ச்சிகளும் அருணாவின் இசைக்கச்சேரியும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது (05)

---

யாழ் மாவட்ட

## நகைத் தொழிலாளர் சங்கம்

**நகைத்தொழிலாளர்களுக்கு விடுக்கும்**

**அன்பான வேண்டுகோள்!**

அன்புடையீர்,

இன்று யாழ் மாவட்ட நகைத் தொழிலாளர் சங்கத்தின் முதலாம் ஆண்டுப் பொதுக் கூட்டமும்; புதிய நிர்வாக தேர்வும் முன்னர் குறிப்பிட்ட 26-03-1994-ல் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதை அறியத்தரும் இவ்வேளையில் எதிர்வரும் 09-04-1994-ல் இடம்பெறும் என்பதனை அறியத் தருகின்றோம்;

இடம் :- யாழ். இந்துக் கல்லூரி (குமாரசாமி மண்டபம்)

காலம் :- 09-04-1994 சனிக்கிழமை

நேரம் :- 2 30 மணி

நன்றி

**தலைவர்.** **செயலாளர்.**

(சி-8908)

---

# நினைவு கூருகின்றோம்...

## 1994-03-26

1984-ம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்காப் படையினரால் கிளிநொச்சியில் வைத்து கைது செய்யப்பட்டு மன்னார் - முருங்கன் காட்டுப் பகுதியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1987-ம் ஆண்டு கப்பல்வன் பகுதியில் பலாலி முகாம் சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மனோ** (நாகலிங்கம் மனோரஞ்சன்-7-ம்வட்டாரம், புங்குடுதீவு-யாழ்)

**ஆகியோரை இந்நாளில்**


**நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8914)

மானிப்பாய் கோ. ப. வர்த்தகர் சங்க வளர்ச்சி

நிதியுதவிக் கலைநிகழ்ச்சிகள்



○ பருத்திநகர் சாண்டோ எம். துரைரத்தினமும் மாணவர்களும் இணைந்து வழங்கும் வீரதீரச்செயல்கள்

- நெருப்பு புதைகுழியில் சிலமணி நேரம் படுத்திருத்தல்
- இரண்டு உழவு இயந்திரத்தை எதிர் எதிராக உடலில் ஏற்றுதல்
- அதிபாரம் கொண்ட லொறியினை மார்பில் ஏற்றுதல்
- ஓடும் வாகனத்தை தொண்டையால் இழுத்தல்
- 35Kg நிறையுடைய குண்டை 7 அடி உயரத்தில் இருந்து உடலில் ஏந்துதல்
- பாரம் கொண்ட கல்லை மார்பின்மேல்வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்
- 3'' 200 ஆணி அடிக்கப்பட்ட படுக்கைக்குமேலாகப் படுத்து மார்பின்மேலாக பாரமுடைய உழவு இயந்திரத்தை ஏற்றுதல்
- துரைரத்தினம் வாயால் மோட்டார் சைக்கிளை தூக்குதல்.

○ தமிழீழ இசைக் குழுவினரின் தமிழீழ எழுச்சிக்கீதங்கள்

இடம்: மானிப்பாய் மாவீரர் கலையரங்கம்

காலம்: 27.03.94 ஞாயிறு மாலை 7.00 மணி

அன்பளிப்பு: 150/- 100/- 50/-

- நிர்வாகம்



விளம்பர அன்பளிப்பு:

புடவை, பலசரக்குச்சாமான், அழகுசாதனப் பொருள்களை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**V.S.K. ஸ்ரோர்ஸ், V.S.M. ஸ்ரோர்ஸ்**

ஆலடிச்சந்தி, மானிப்பாய். (சி-8898)


இடைக்கால தடை நீக்கக்கோரும்

## தொண். மேன்முறையீடு நீதிமன்றில் விசாரணை

(கொழும்பு)

இ.தொ.கா. தேசியசபை கூட்ட முடிவுகளை அமுல்படுத்துவது தொடர்பாக நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையை நீக்கக் கோரும் இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான், உப தலைவர் ஏ. எம். டி. இராஜன் ஆகியோர் தாக்கல் செய்திருந்த மேன்முறையீடு மீதான விசாரணை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆரம்பமாகியது.

மன்றின் ஆலோசனைக்கும் மனுதாரின் இணக்கத்திற்கும் பிரதிவாதி தரப்பில் முழுமையான இணக்கம் தெரிவிக்கப்படாததை அடுத்தே தடை உத்தரவு நீக்குவது தொடர்பான விசாரணை ஆரம்பமாகியது.

இ. தொ. கா. தேசிய சபையை கூட்டி ஜனநாயக ரீதியில் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்தால் என்ன என்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சரத் என். சில்வா ஆலோசனை தெரிவித்துள்ளார்.


திருநெல்வேலி சிவன் கோவில் புனராவர்த்தனப் பிரதிஷ்டா

மஹாகும்பாபிஷேக

விஞ்ஞாபனம்

மஹாகும்பாபிஷேகம் 27.03.94 ஞாயிற்றுக்கிழமை காலை 7-45 மணி முதல் நண்பகல் 12-00 மணி வரையிலான சுபவேளையில், பிரதிஷ்டா குரு சிவஸ்ரீ ச. யோகீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

கிரியாரம்பம்: 23-03-94 புதன்கிழமை காலை 6-00 மணிமுதல்

எண்ணெய்க்காப்பு: 25-03-94 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிமுதல் 26-03-94 சனிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு நிறைவுசெய்யலாம்.

முக்கிய கிரியைகளிலும் இறைவனுக்கு எண்ணெய் சாத்தி பேரின்ப பேறு அடைவதிலும் பக்தர்கள் பங்கு கொண்டு இறையருள் பெறுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

திருநெல்வேலி சிவன்கோவில்,
திருநெல்வேலி. தேவஸ்தானமும்
(7828) ஆலய நிர்வாக சபையாரும்


## நலன்புரிசங்க நிர்வாகத்தில் செயலக ஊழியர்கள் புகார்

(யாழ்ப்பாணம்)

மூன்று வருடங்களாகக் கூட்டப்படாத செயலக நலன் புரிச்சங்கப் பொதுக்கூட்டம் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்றபோது உறுப்பினர்கள் தற்போதைய நலன்புரிச்சங்கத்தின் மீது தமக்குள்ள அதிருப்தியைத் தெரிவித்ததை அடுத்து 12 பேர் கொண்ட இடைக்கால நிர்வாக சபை ஒன்று தெரிவுசெய்யப்பட்டது.

கடந்த மூன்று வருடங்களாகப் பொதுக்கூட்டம் கூட்டப்படாமையும், நலன்புரிச் சங்கத்தால் செயலக ஊழியர்களிடம் இருந்து நிதி திரட்டிக் கொண்டாடப்பட்ட விழாக்களுக்கானவரவுசெலவு பற்றி அறிக்கைகள் வெளியிடாமையும் மேலும் பல ஊழல்கள் தொடர்பாகப் புகார்கள் நலன்புரிச்சங்கத்தின் மீது நலன்புரிச்சங்க அங்கத்தவர்களால்சுமத்தப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை கடந்த 21-ம் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கான அழைப்புக் கடிதத்தில் 7-ம் திகதி எனக் குறிப்பிடப்பட்டபோதும் அங்கத்தவர்களுக்கு 17-ம்திகதியே அக்கடிதங்கள் வழங்கப்பட்டதாகவும், இது பொதுக்கூட்டம்நடைபெறுவதற்கு நான்கு தினங்கள் மட்டும் இருக்கையிலே வழங்கப்பட்டுள்ளமையும் அங்கத்தவர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுபற்றி தெரிவித்த அங்கத்தவர்கள் சிலர் இச்செயலானது வழமையாக பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு முதல் வழங்கப்படும் கால அவகாசம் மீறப்பட்டுள்ளதாகவும் இது பொதுக்கூட்ட விதிகளுக்கு முரணானது எனவும் தெரிவித்தனர்.

மேற்படி கூட்டம் நடைபெற்றபோது தமது அதிருப்தியை அங்கத்தவர்கள் அரச அதிபருக்கு தெரிவித்ததை அடுத்து 12 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்று உருவாக்கப்பட்டது இவ் இடைக்கால நிர்வாக சபைக்கு பதவி வழி அடிப்படையில் தலைவராக அரசாங்க அதிபரும், உப தலைவராக செயலக நிர்வாக உத்தியோகத்தரும், 10 பேர்கொண்ட செயற்குழு உறுப்பினர்களையும்கொண்டு அமைக்கப்பட்டது.

இந்த இடைக்காலநிர்வாக சபை மூன்று மாத காலத்திற்குள் புதிய யாப்பொன்றைத் தயாரித்து பொதுச்சபையின் அங்கீகாரத்தைப் பெறவேண்டுமெனவும் அதன் பின்னர் புதிய நிர்வாகசபைத் தேர்தல் நடைபெறுமெனவும் முடிவெடுக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை இதுவரை காலமும் செயற்பட்டுவந்த நலன்புரிச் சங்கம் பல தடவைகள் பொதுக்கூட்டம் நடைபெறுமென அறிவித்து பின் பொதுக்கூட்டத்தை நடத்தாது காலவரையறையின்றி ஒத்திவைத்தமையும் இதை எதிர்த்து நலன்புரிச்சங்க அங்கத்தவர்கள் கையெழுத்திட்டு நலன்புரிச் சங்கத் தலைவரும் அரச அதிபருமான திரு. கா. மாணிக்கவாசகருக்கு மகஜர் கையளித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (சி)

## கண்டெடுப்பு

கோண்டாவில் பகுதியில் தங்க நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்குரியவர் ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

மாபெரும் மலிவு விற்பனை

எதிர்வரும் புத்தாண்டுத் தினத்தை முன்னிட்டு

எதிர்வரும் புத்தாண்டுத் தினத்தை முன்னிட்டு

# எழினி புடவை வாணிபம்

வழங்கும் மலிவு விற்பனை

## 28-03-94 முதல் 31-03-94 வரை

(திங்கள்) (வியாழன்)

சேரன் பணிமனை - மருத்துவமனை வீதி
யாழ்ப்பாணம்

**மலிவு விற்பனை**

பிரதான வீதி, பருத்தித்துறையில் அமைந்துள்ள
எமது நிறுவனத்தில் 03-04-94 அன்று மட்டும்

★ வியாபாரிகளின் தேவைகருதி விசேட கழிவுடன் ★ தையல் நிலையத்தினருக்கு ஏற்ற துணிவகைகள்
★ சிறியோர் முதல் பெரியோர் வரைக்கும் ஏற்ற எல்லாவகை உடைகளும்

உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்

(ஜ-8915)

# மலேரியா கட்டுப்பாட்டில் மாநகரசபை முன்னேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் மலேரியா நோய் வெகுவாகக்கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், சகல தரப்பினரின் பூரண ஒத்துழைப்பு கிடைத்தால் தொடர்ந்து இந்த நிலையைபேண முடியுமென யாழ். மாநகர சபை சுகாதார பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

சென்ற டிசம்பர், ஜனவரி மாதங்களிலும் பெப்ரவரி முதல் வாரத்திலும் யாழ். மாநகரசபை எல்லை பகுதியில் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டோரில் இருபது சத வீதத்தினர் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டிருந்தது ஆய்வு மூலம் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் ஆனால் பெப்ரவரி முதல் வாரம் நீங்கலாக மார்ச் இருபதாம் திகதி வரை 976 நோயாளர் மலேரியா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் இதில் 122 பேர் மட்டுமே மலேரியா நோயாளர் என்பதை பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் இது 6·7 சதவீதம் எனவும் தெரிவித்த சுகாதார பிரிவினர் இதில் மூன்றுபேர்மூளை மலேரியா நோயாளர் எனவும் தெரிவித்தனர் இவர்கள் நாவாந்துறையை சேர்ந்தவர்கள் என்றும் சுமார் ஒரு மாதமாக ஊரலி பகுதியில் இவர்கள் சீவியம் நடத்தியுள்ளனர் என்பதும் இவர்களின் பின்னணியை ஆராய்ந்ததன் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகதெரிவித்தனர்.

நீரை தேங்க விடாது வழிந்தோட கூடிய நிலையில் வடிகால் வசதிகளை செய்வதன் மூலமும் நுளம்பு பெருகும் சந்தர்ப்பத்தை குறைப்பதன் மூலமும் மலேரியா தடுப்புக்கு மேலும் உதவி செய்ய முடியுமென அவ் வட்டாரம் தெரிவித்துள்ளது. (நி)

## விளையாட்டு விதிகள் பற்றிய கருத்தரங்குதொடர்ஆரம்பம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் மெய்வல்லுநர் விதிகளில் தேர்ச்சி பெற்ற அதிகாரிகளைத் தெரிவு செய்வதற்கான பரீட்சைகள் விரைவில் நடைபெற இருப்பதை முன்னிட்டு தொடர் கருத்தரங்கு ஒன்றை யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது.

விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்தோர் மற்றும் விளையாட்டுத்துறை ஆர்வலர்களுக்கான இக் கருத்தரங்கு நாளை காலை ஒன்பது மணியளவில்இந்துக்கல்லூரிகுமாரசுவாமி மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

## காயம் ஏற்படுத்தியவருக்கு நீதிமன்று அபராதம்விதிப்பு

(வடமராட்சி)

கொட்டனால் அடித்து படுகாயம் ஏற்படுத்திய ஒருவருக்கு 2,500 ரூபா குற்றப்பணமும், 7500 ரூபா இழப்பீடும் வழங்குமாறு பருத்தித்துறை நீதியாளர்திரு. மயூரன் கடந்த வியாழன் தீர்ப்பு வழங்கினார்.

பருத்தித்துறை காவல் துறையினர் இவ்வழக்கை நீதிமன்றில் தாக்கல் செய்ததையடுத்து விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதியாளர் இத் தீர்ப்பை வழங்கினார்.

துன்னாலை வடக்கைச்சேர்ந்த சின்னையா - விநாயகமூர்த்தி என்பவருக்கு அதே இடத்தைச்சேர்ந்த கந்தசாமி-ஜெயசீலன் என்பவர் கொட்டனால் அடித்து படுகாயம் ஏற்படுத்தினார். (யோ)

ஃ ஃ ஃ

கத்தியால் வெட்டி உயிர் ஆபத்து ஏற்படுத்தும் வகையில் காயம் ஏற்படுத்தியவருக்கு எதிராக பருத்தித்துறை காவல் துறையினர் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்

கரவெட்டி இராசகிராமம் நற்குணம்-ஜெகநாதன் என்பவருக்கு துன்னாலை கரவெட்டியைச்சேர்ந்த ஒருவர் இவ் உயிர் ஆபத்தை உண்டு பண்ணியதற்காக நீதியாளர் பிரதியா காயம் ஏற்படுத்திய துன்னாலை கரவெட்டியைச் சேர்ந்த ஆனந்தம் பிரான்சிஸ் என்பவரை காயம் அடைந்தவருக்கு 75 ஆயிரம் ரூபா இழப்பீடு செலுத்துமாறும் அத்தோடு எதிரிக்கு மேலும் 9 வருட சிறைத்தண்டனையையும் விதித்து கடந்த வியாழன் தீர்ப்பு வழங்கினார் இவ்வழக்கை நீதியாளர் திரு. ஒப்பிலான் விசாரணைக்கு எடுத்திருந்தார். (யோ)

## இடமாற்றம்

(தென்மராட்சி)

பளை அரசினர் வைத்தியசாலையில் கடமை ஆற்றி வந்த டாக்டர் பி. நடராசா அவர்கள் கடந்த மாதம் அம்பன் அரசினர் வைத்திய சாலைக்கு இடமாற்றலாகிச் சென்றுள்ளார்.

## யாழ் வணிகர் கழகம்

### யாழ் வணிகப் பெருமக்கள் அனைவருக்கும்!

அன்புடையீர்!

### விசேட பொதுக்கூட்டம்

**காலம்:-** 26-03 94 சனிக்கிழமை
**நேரம்:-** பிற்பகல் 3.00 மணி
**இடம்:** யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்

வணிகப் பெருமக்களின் பல மிக முக்கிய பிரச்சினைகளை மேற்படி கூட்டத்தில் ஆராயப்பட்டு பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படவிருப்பதால் யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல வணிகப்பெருமக்களும் தவறாது இக் கூட்டத்தில் சமுகம் கொடுக்குமாறு சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம். விடுதலைப்புலிகளின் அரசியல் துறை, தொழிற்துறையின் பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

நன்றி-வணக்கம்

நா. க. அன்னலிங்கம்
பொதுச் செயலாளர்

(சி 8920)

உ
சிவமயம்

# புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

## காலம்:- 26-03-1994 நேரம்:- காலை 10.00 மணி

### சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானம் (வைரவர் கோவில்)

## (தேர்த்திருவிழா 27-03-1994 ஞாயிற்றுக்கிழமை)

### ஆலய பிரதம குருக்கள் "கிரியாகானகலாமணி" சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள் அவர்களின் ஆசியுரை

சீரும் திருவும் பொலியும் சாவகச்சேரி நுணாவில் கிழக்கில் அந்தணப் பெருமக்களால் இறையருள் கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட ஓர் ஆலயம். அவ்வாலயத்தில் கலியுக வரதனாம் கந்தப் பெருமான் வீற்றிருந்தருள்பாலிக்கின்றான்; அப்பெருமான் விநாயகர், அம்பிகை, மகா

### தேர்த் திருப்பணிச் சபைச் செயலாளரின் செய்தி

அழகும், பொலிவும், வனப்பும் மிக்க சாவகச்சேரி நகரின் நுணாவில் (மத்தி) பதியில் வீற்றிருந்து நல்லருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஆறெழுத்து மந்திர நாதரான ஆறுமுகப் பெருமானுக்கு



யார்களை ஆற்றுப்படுத்தும் ஆறுமுகப் பெருமானுக்குஅறுகோணத்தில் தேர் அமைத்தமை சாலப் பொருத்தமுடைத்து என்பது தெளிவு.

மெய்யடியார்கள் உள்ளத்


### தென்மராட்சி பிரதேச செயலாளர் பு. சுந்தரம்பிள்ளை அவர்கள் வாழ்த்துரை

சாவகச்சேரி தென்மராட்சி சைவமும் பண்பும் பக்தியும் சிறந்தோங்குப்பதி. ஆலயங்களும் நித்திய நைமித்தியங்களோடு சிறந்து விளங்குகிறது. நுணாவில் கிழக்கில் அருள்மிகு ஸ்ரீ கந்தசாமி கோவில் கண்டி வீதியில் (வைரவர் கோவில் எனும் நாமத்துடன்) கம்பீரமாகக் காட்சியளிக்கும் ஸ்தலமாகும்.

அவ்வாலயத்தில் மாதம் ஒருமுறை கார்த்திகை உற்சவம் கந்தசஷ்டி விழா லட்சார்ச்சனை வருடாந்த உற்சவம் என்பன சிறப்பாக நிகழ்வதாக

ஸ்தாபிக்கப்பட்ட ஓர் ஆலயம்; அவ்வாலயத்தில் கலியுக வரதனாம் கந்தப் பெருமான் வீற்றிருந்தருள்பாலிக்கின்றான்; அப்பெருமான் விநாயகர், அம்பிகை, மகா விஷ்ணு, நவக்கிரக தேவர்கள், காத்தற்கடவுளான வைரவப் பெருமான் ஆகிய கடவுளர்கள் சூழத்திகழ்வதனால் இவ்வாலயம் பஞ்சாயதன ஆலயமாகக் காஞ்சிமுனிவர் ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளால் அருளாசி வழங்கப்பட்டது. இக்கோவில் அறக்காவலர், ஆலயச் சூழலிலுள்ள அடியார்கள் எல்லோராலும் நித்திய நைமித்தியங்கள் சிறப்பாக நடைபெறுவதோடு பங்குனி மாதத்தில் வரும் உத்தரநட்சத்திரத்தை ஈறாகக் கொண்டு பத்து நாட்கள் உற்சவம் நடைபெறுகிறது; அவ்வுற்சவம் இவ்வருடம் சாந்திக மகோற்சவமாகச் சிறப்புப்பெற்று தேர்த்திருவிழா தீர்த்தத்திருவிழா என்பவற்றுடன் தெய்வீக விழாவாக நடைபெறுகிறது. தேர்த்திருவிழாவிற்காக ஓர் புதிய சித்திரத்தேர், ஆலய தேர்த்திருப்பணிச்சபையினரால் அவ்வூர் மக்களின் தர்மப்பொருள் கொண்டும் ஆலய இந்துமாமன்றம் அடியார்கள் அனைவரினதும் அதிதீவிரத்தையான ஒத்துழைப்புடனும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது; சித்திரத் தேரைச் சிற்பக்கலையம்சத்தோடு முருகனுக்குரியதான அறுகோண வடிவத்தில் மட்டுவில் "சிற்பக்கலைச் செல்வன்" திரு. கி. கலாமோகன் ஸ்தபதியார் அவர்கள் உருவாக்கியுள்ளார்கள்; குறுகிய காலத்தில் நடைபெற்ற சித்திரத்தேர்த் திருப்பணியை முருகன் திருவருள் கொண்டு நடாத்திய தேர்த் திருப்பணிச் சபையினர் சித்திரத்தேரை நிர்மாணித்த சிற்பக்கலைஞர்கள், பொருள்கொடுத்தோர், உதவி புரிந்த அடியார்கள் ஆலய இந்து மாமன்றத்தினர் அனைவரையும் வாழ்த்துவதோடு வெள்ளோட்ட விழா சிறப்பாக நடைபெற முருகன் திருவருள் கொண்டு ஆசி நல்குகிறேன்.

வணக்கம்



பாலித்துக் கொண்டிருக்கும் ஆறெழுத்து மந்திர நாதராகிய ஆறுமுகப் பெருமானுக்கு புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டுள்ளமை முருகனடியார்களுக்கு உவகை தரும் செய்தியாகும். இத்தேர் கனின்மிகு சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடியது மட்டுமின்றி அறுகோண அமைப்பில் செய்யப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும். ஆறுமுகங்களையுடைய முருகப்பெருமான் எல்லாத் திக்குகளிலும் தன் அருட்பார்வையைச் செலுத்தி அருளாட்சி புரிந்து மெய்யடியார்கள் வினை அகலும் வண்ணம் அறுகோணங்களில் ஆறு வாயில்களுடன் கூடியதாக இத்தேர் அமைக்கப்பட்டுள்ளது. தேர்த் திருப்பணிச் சபையினர் தேரை உருவாக்கும்போது அறுகோண அமைப்பை ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்பது குறித்து சில குறிப்புரைகள் தருவது இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமுடையதெனக் கருதுகின்றேன். குமரனாகிய முருகன் அறுவகைச் சமயங்களில் ஒன்றான கௌமார சமயத்தின் கடவுளானவர், ஆறு திருமுகங்களை உடையவர்; 'சரவணபவ' "குமாராயநம" என்ற ஆறெழுத்து மந்திரத்தை திருநாமங்களாகக் கொண்டவர்; இவர் உகந்துறைகின்ற தலங்கள் (படைவீடுகள்) ஆறு: முருகனுக்குரிய முக்கிய விரதமான கந்தசஷ்டி விரத நாள்கள் ஆறு, இவ்வாறு முருகப்பெருமான் 'ஆறு' என்ற எண்ணிக்கையில் பிற தெய்வங்களுக்கில்லாத தனிப் பெருநிலையினைக்கொண்டுவிளங்குகிறார் ஆறெனும்பதைக் கொண்டு அடிபடைத்து என்பது தெளிவு.

மெய்யடியார்கள் உள்ளத்தைக் கனியச் செய்யும் வகையில் இத்தேரை வடிவமைத்து உருவாக்கித் தந்துள்ள சிற்பக்கலைஞர் திரு. கி. கலாமோகன் அவர்களின் திறமையும், நுண்மையும் வியக்கத்தக்கது ஈழத்தாய் ஈன்றெடுத்த கலைஞர்கள் வரிசையில் தனியிடம் பெற்றுள்ள இச்சிற்பக் கலைஞரின் பணி புனிதமானதும் பாராட்டுக்குரியதுமாகும்.

இன்று இத்தேர் வெள்ளோட்ட உலாவரும் இவ்வேளையில் இத்தேர்த் திருப்பணி முழுமை பெறுவதற்கு உறுதுணையாக இருந்த பல அன்பர்களையும். அடியார்களையும் நினைவுறுத்துவது நம் கடமையாகும். பணம், பொருள், சரீரஉதவி நல்கியவர்கள், உற்சாகமளித்து உறுதுணையாக நின்ற திருப்பணிச்சபை உறுப்பினர்கள், ஆலய இந்து இளைஞர் மன்றத்தினர், தேர் அமைக்க இடவசதி உவந்தளித்த திரு. தம்பு செல்வரத்தினம் அவர்கள் அவர்தம் குடும்பத்தினர், ஆலோசனைகள், அறிவுரைகள் வழங்கிய அந்தணப் பெருமக்கள் யாவரினதும் கூட்டுமுயற்சியினால் குறித்த காலத்துக்குள் உருவாக்கப்பட்டு இன்று வெள்ளோட்ட உலாவரும் இச்சித்திரத் தேரில் நாளை முருகப் பெருமான் வள்ளி சமேதரராக வீதி உலாவும் வரவுள்ளார்.

இன்றைய வெள்ளோட்ட விழாவும் நாளைய தேர்த்திருவிழாவும் சிறப்பாக இனிது நடைபெற எல்லாம் வல்ல முருகப்பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து அவர் அருள் வேண்டி நிற்கின்றேன்.

மாறாத அழகும் குன்றாத இளமையும் கொண்ட முருகனது திருநாமம் என்றென்றும் வாழ்க.

**திரு. வ. நாகேஸ்வரன்**
செயலாளர்
தேர்த் திருப்பணிச் சபை

அவ்வாலயத்தில் மாதம் ஒருமுறை கார்த்திகை உற்சவம் கந்தசஷ்டி விழா லட்சார்ச்சனை வருடாந்த உற்சவம் என்பன சிறப்பாக நிகழுவதாக அறிகிறேன்; சில சமயம் அவ்வழியால் செல்லும் போது வைபவங்கள் நிகழும் நேரம் தரிசிக்கும் வாய்ப்பும் எமக்குக் கிட்டியிருக்கிறது இவ்வருடம் வழமையாக நடைபெறும் பங்குனி உத்தரவிழா தேர்த் திருவிழாவாக நடைபெறுகிறது; அதற்கமைவான சித்திரத்தேர், திருப்பணிச்சபையினரால் சிற்பக்கலைச் செல்வன் திரு. கி. கலாமோகன் அவர்களைக்கொண்டு அழகுற நிர்மாணிக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நிகழ்கிறது. இக்காலகட்டத்தில் இவ்வளவு விரைவில் சிறப்பாக இத்தேர்த்திருப்பணி நடைபெறுவது பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியது. எனவே இந்நிகழ்வில் உயர்வு பெறும் தேர்த் திருப்பணிச் சபையினர் சித்திரத்தேரை நிர்மாணிக்கும் சிற்பாசாரியார் பொருள் கொடுக்கும் அடியார்கள் மற்றும் அனைவரையும் முருகன் திருவருள் கொண்டு அன்புடன் வாழ்த்துகிறேன்

## வாழ்வு சிறிது வாழ்கலை பெரிது

(புதிய சித்திரத்தேரை நிர்மாணித்த சிற்பாச்சாரியார் சிற்பக் கலைச் செல்வன் மட்டுவில் திரு கி. கலாமோகன் அவர்களின் சிறப்புரை.)

கலைகள் பல; அவற்றில் சிற்பக்கலைமக்களின் வாழ்வு, ஆலய வணக்கம் என்பவற்றுடன் தொடர்புடையது; ஆலயத்தின் அமைப்புகள், ஆலயவிழாக்களுக்குரியதான வாகனங்கள், தேர், சப்பறம், மஞ்சம் என்பவற்றின் அமைவுகள் சிற்பக் கலையின் முக்கிய அம்சங்களாகும்; இவற்றில் முக்கியமானது சித்திரத்தேர். சித்திரத்தேர் ஒரு சிற்பியின் கைவண்ணம், கலையம்சம், தெய்வீகத் தன்மை என்பவற்றுடன் உருவாகிறது.

ஆலயங்களின் சித்திரத்தேரை உருவாக்கும்போது அவை முறையே நாகரம், திராவிடம், வேஸரம் என மூன்று பாணிகளாக வகுக்கப்படுகின்றன. நாகரம் சதுர வடிவமாகவும், திராவிடம் எண்கோண வடிவமாகவும், வேஸரம் வட்ட வடிவமாகவும், அமைகிறது; அதுமட்டுமல்லாமல் ஆறு திருமுகங்களையும், பன்னிரு திருக்கரங்களையும் உடைய முருகப்பெருமானுக்கு தேர் அமைக்கும் போது அறுகோண வடிவமான தேரை நிர்மாணிக்கின்றோம். அவன் பன்னிரு திருக்கரங்கள்போன்று பன்னிரு பவனக் கால்களுடன் தேர் அமைகின்றது; நுணாவில் கிழக்கு கந்தசாமி கோயிலுக்கு நிர்மாணித்த இச் சித்திரத்தேர் அறுகோண வடிவமாக ஆலய பிரதம குருக்களின் ஆலோசனையுடன் எமது கற்பனையின் சிற்ப சாஸ்திரத்திற்கு அமைய அழகுறச் செய்வதற்கு முதலில் முருகன் திருவருள் வழிசெய்தது; அதற்கேற்ற மிக விரைவில் செய்வதற்குரிய பொருளையும், வசதிகளையும், ஊக்கத்தையும் திருப்பணிச் சபையினர் நன்கு செய்தார்கள். அதனால் விரைவில் இச்சித்திரத்தேரைச் செய்ய முடிந்தது. எனவே எம்பெருமான் திருவருள்கொண்டு இச்சித்திரத் தேர்மூலம் எமது சிற்பக்கலை வரவு நிலைக்கவும் வழிசெய்த திருப்பணிச் சபையினர், அன்புடைய மக்கள், இந்து இளைஞர் மன்றத்தின் அனைவரையும் வாழ்த்தி வணங்குவதில் பெருமைகொள்கிறேன்.

(இ-8921)

## தேரோட நம் திருவூரில் சீரெல்லாம் பெருகிவரும்

நுணாவிற் பதி அருள் கந்தசுவாமி (வைரவர்) ஆலயத் தேர்த்திருப்பணி இறையருளால் கைகூடி இன்று புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட வீதி உலா வருவதையிட்டு இந்து மாமன்றம் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறது;

தென்மராட்சியில் நுணாவிற்பதியில் உள்ள எமது கந்தசுவாமி ஆலயம் பழம் பெருமையும் சிறப்பும் வாய்ந்த திருத்தலமாகும். நுணாவிற்பதியில் வாழும் மக்களின் மனங்களில் நிறைந்து அவர்கள் குறைகளைப் போக்கி அருள் பாலித்து வருபவர் இங்கு எழுந்தருளியிருக்கும் கந்தக்கடவுள்; இவருக்குச் சித்திரத் தேர் ஒன்று இல்லாதிருந்தமை நீண்டகாலமாகவே இவ்வூர் வாழ் மக்களின் மனதில் பெரும் குறையையும் சுமையையும் ஏற்படுத்தி வந்துள்ளது; இதனை நீக்கி, எம்பெருமான் திருவுலா வருவதற்கு புதிய சித்திரத்தேர் ஒன்றை ஆக்க வேண்டுமென்ற இவ்வூர் மக்களின் அயராத முயற்சியினால் புதிய தேர் இன்று கந்தன் வீதியில் கன்னிப் பயணம் வருகிறது. இதன் மூலம் இவ்வூர் மக்களின் பெருங் குறையொன்று மறைந்தது.

இப்பெருமுயற்சியில் தேர்திருப்பணிச் சபையினர் பங்கு அளவிடற்கரியது இன்றைய இக்கட்டான சூழ்நிலையிலும் கருமமே கண்ணாயிருந்து காரியத்தைத் திறம்பட முடித்த அச்சபையின் உறுப்பினர் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இவர்களின் முயற்சியை மெய்வடிவில் கலையழகுடன் சித்திரத்தேராக ஆக்கித்தந்த சிற்பாச்சாரி கலாமோகன் அவர்கள் போற்றப்பட வேண்டியவர்;

இவர்களின் அயராத முயற்சிக்குத் தோளோடு தோள்நின்று பங்கெடுப்பதற்கு இந்துமன்றத்தினராகிய எமக்கு இறைவன் திருவருள் கிடைத்ததையிட்டு மனமகிழ்ச்சியடைகிறோம் இனிவரும் காலத்திலும் இதேபோல நாம் ஆலயத்திருப்பணிக்கு எம்மாலான உதவிகள் அனைத்தையும் வழங்க இறைவன் அருள் தருவார்.

புதிய சித்திரத்தேரின் வெள்ளோட்டத்தையிட்டு பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும், ஆசிகளையும் மன்றம் தெரிவித்துக் கொள்கின்றது அத்துடன் இத்தேரில் கந்தன் எழுந்தருளி எம் மக்கள் குறைகளைப் போக்கி அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்வைத்தர வேண்டுமென்று அவன் மலரடியை இறைஞ்சுகின்றோம்.

சாந்தி

**திரு. து. லோகேஸ்வரசர்மா**
தலைவர் (இரவி ஐயர்) இந்துமாமன்றம்
நுணாவில் கந்தசுவாமி ஆலயம்,

சிந்தனைக்கு

சில தோல்விகள் வெற்றிகளையும் விட மகத்தான நலன்களால் அமைகின்றன.

-மிஷேல் டிமொன்த்தேன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2021
தபால் பெட்டி எண் 05

# எதேச்சதிகாரத்திற்கு எதிரான தீர்ப்பு

தென் மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி கண்டுள்ளது. எதிர்த்துப் போட்டியிட்ட சுதந்திரக்கட்சி தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணியான பொதுஜன ஐக்கிய முன்னணி அமோக வெற்றி பெற்றுள்ளது. கிடைக்கப்பெற்ற வாக்குகளின் பிரகாரமும் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் பொதுஜன ஐக்கியமுன்னணியின் வெற்றிதெளிவாக மக்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்து இத்தோல்வியானது 1977-ம் ஆண்டிற்குப் பிறகு கிடைத்த பெரும் தோல்வி என்றே சொல்லலாம். கடந்த வருடம் இடம் பெற்ற மாகாண சபைத் தேர்தலிலும், மேல் மாகாணம், தென் மாகாணம், வடமேல் மாகாணம் என்பனவற்றை ஐக்கிய தேசியக் கட்சி இழந்திருப்பினும் அத்தோல்விகள் அக்கட்சியைப் பாதித்ததைவிட இத்தோல்வியானது அக்கட்சியையும், அதன் தலைவர் டி பி. விஜேதுங்காவையும் பெரிதும்பாதிக்கும் என்பதில் சந்தேகம்கொள்ளத் தேவையில்லை.

இத்தோல்வியானது ஐ. தே. கட்சியின் தோல்வி என்பதைவிட ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் தோல்வி எனவும் கொள்ளப்படுவதற்கு நியாயங்கள் உண்டு. இது அவரது கடந்த பத்து மாத ஆட்சிக்கும் அவர் கடைப்பிடித்த கொள்கைக்கும் கிடைத்த தோல்வி என்பது முற்றிலும் பொருந்தும்; ஏனெனில் இத்தேர்தல் மட்டுமே டி பி. விஜேதுங்கா ஐ. தே. கட்சிக்கு தலைமையேற்ற பின்னர் அறிவிக்கப்பட்டு நடத்தப்பட்ட முதல்தேர்தலாகும்.

தென் மாகாணசபைத் தேர்தலில் டி பி.விஜேதுங்கா தெளிவாகவே தனது கொள்கையை முன்வைத்து ஆதரவு தேட முற்பட்டார். பௌத்த - சிங்கள இனவாதத்தைக் கிளறிவிட்டு தேர்தலில் வெற்றிபெற முனைந்தார். அவரது பிரதான பிரசாரமாக இருந்தது, இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண்பதற்கான அனுமதியைக் கோரியதேஆகும். இரண்டாவதாக தென்மாகாண அபிவிருத்தி பற்றியதாக இருந்தது;

# காவிரிப் பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டியே தீருவேன்

## - தமிழக முதல்வர் ஜெயலலிதா

(சென்னை)

இதற்கு முன்பு இருந்த சில ஆட்சியாளர்கள் கோட்டை விட்டது போல அல்லாமல் காவிரிப் பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையைப் பெற்றுத் தருவதிலிருந்து ஒரு போதும் பின்வாங்க மாட்டேன், இவ்வாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா உறுதியாகத் தெரிவித்தார்.

தஞ்சைமாவட்டத்தில் மாவட்ட அரசின் திட்டப்பணிகள் தொடக்கவிழா மற்றும்நலத்திட்டஉதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்:

சுழன்றும்ஏர்பின்னது உலகு என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு ஏற்ப உலகிலுள்ள அனைத்து தொழில்களுக்கும் அச்சாணியாக விளங்குகின்ற சிறப்பினைப் பெற்ற உழவுத் தொழிலைமேற்கொண்டுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் வாழும் தஞ்சைத் தரணிக்கு வந்து உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தஞ்சைப் பகுதி மக்களது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தஉயிர்மூச்சானபிரச்சினைகாவிரி நதிநீர்பிரச்சினை தமிழ் நாகரிகத்தின் அடையாளச் சின்னமாகவும், விளங்கி வந்த காவிரி நதியில்நீரை திறந்து விடுங்கள் என்று அண்டை மாநிலத்தைப் பார்த்து வேண்டுகோள் விடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்,

தமிழ் மக்களின் உரிமைகளை சரியான நேரத்தில் காப்பாற்றாமல் சிலர் கோட்டை விட்ட காரணத்தினால் இன்று நமக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய தண்ணீருக்கு போராடவேண்டிய சூழ்நிலைக்கு நாம் தள்ளப் பட்டுள்ளோம்,

காலத்தே காப்பாற்றப்படாததால் இழந்து விடுகின்ற உரிமையை மீண்டும் பெறுவது என்பது எத்தகைய தொரு பிரச்சினைக்குரியது என்பதைக் காவிரி பிரச்சினை நமக்கு எடுத்துக் காட்டுகிறது சரித்திரம் நமக்கு கற்றுத் தந்த பாடமாகத் தான் இதனை நாம் எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

நடந்ததைப் பற்றி கவலை கொள்வதில் எந்தப் பயனும் இல்லை. நானும் அப்படிக் கவலைப் பட்டு சோர்ந்து போக மாட்டேன். ஆனால் விவசாய தேவைக்கு போதுமான குறைந்த பட்ச காவிரி நதிநீரை பெற நாம் நடத்திய போராட்டங்கள்தான் எத்தனை? எத்தனை? அனுபவித்த துன்பங்கள் எத்தனை? எத்தனை?

தொடர்ந்து இழைக்கப் பட்டுவரும் அநீதியால் தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கு ஒரு நல்ல தீர்வு காண வேண்டும் என்று எண்ணி உண்ணாவிரத அறப் போராட்டத்தை நான்மேற்கொண்ட போது தன்மானம் மிக்க தமிழக மக்கள்அனைவரும் ஓரணியில் எனது பக்கம் நின்றார்கள். தமிழகத்தின் உயிர்நாடி பிரச்சினைக்கு தீர்வு காண நான் மேற்கொண்ட அறப் போராட்டத்தை முழுமையாக ஆதரித்த பல தரப்பட்ட மக்களின் பேரன்பையும், பேராதரவையும் இன்று நினைத்தாலும் என் மனம் நெகிழ்ந்து போகின்றது. அன்று உங்கள் பேராதரவுடன் நான் மேற்கொண்ட அறப் போராட்டத்தின் விளைவாக மத்திய அரசு காவிரி நதிநீர் பங்கீட்டு நடுவர் மன்றத்தின் இடைக்கால தீர்ப்பை அமுல்படுத்த ஒரு குழுவை அமைத்தது. உங்கள் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டிருக்கும் நாங்கள் எப்போதும் விழிப்போடு இருந்து நடுவர் மன்ற இடைக்கால தீர்ப்பின்படி நமக்கு கிடைக்க வேண்டிய பலன்கள்அனைத்தையும் பெற்றுத் தருவதில் தயங்க மாட்டோம், என்றுமே பின் வாங்க மாட்டோம் எனவும் தெரிவித்தார்.

# இனமோதல் 40 பேர் பலி

(லண்டன்)

புருண்டியில்பெரும்பான்மை ஹூடு இனத்தவர்க்கும் சிறுபான்மை டுற்சி இனத்திற்கும் இடையில்நடைபெற்ற மோதலில் 40 பேர் பலியாகினர்.

புஜூம்புரா பகுதியிலிருந்த ஒருவரை ஒருவர் வெளியேற்றுவதற்காக இரு இனத்தவர்களும் சண்டையிட்டு வருகின்றனர்.

# அறிவாலயம் மீட்கும்வரை ஓயப்போவது இல்லை

## வை. கோ. தெரிவிப்பு

(சென்னை)

லட்சக்கணக்கான தொண்டர்களின் ரத்தத்தால் உருவான அண்ணா அறிவாலயம் தற்போது தி மு கவுக்கு சொந்தமானது அல்ல. அதை மீட்டு தொண்டர்களிடம் ஒப்படைக்கும்வரைஓயப்போவது இல்லை. இளைஞர்கள் தியாகம் செய்வதற்கும், போராடுவதற்கும் மனதைத் தைரியப் படுத்திக்கொள்ளல் வேண்டும். தமிழ்நாடு அரசு நேர்மை இல்லாத அரசாக இருக்கிறது மத்திய அரசோ மலை விழுங்கி மகாதேவனாக இருக்கிறது. இவ்வாறு தி மு க பொதுச் செயலாளர் வை கோபாலசாமி தெரிவித்தார்.

நாகை காயிதே மில்லத் மாவட்டம்திருவாரூர் தெற்கு வீதியில் நடைபெற்ற விழாவொன்றில் கலந்துகொண்டு பேசிய வை கோபாலசாமி மேலும் கூறுகையில், நான் என்னதவறுசெய்தேன்?என்ன துரோகம் செய்தேன்?தொண்டர்கள் என்னை நேசித்தது தவறா? தி மு.க.வின் வரலாற்றில் இப்போது ஒரு திருப்புமுனை ஏற்பட்டுள்ளது தனி நபரைவிட இயக்கம் பெரிது. உண்மையான தி.மு க. எது? அண்ணாவின் பாசறை எது? என்பதை திருவாரூர் மக்கள் நன்றாக உணர்ந்து இருக்கிறார்கள்.

நாம் யாரையும் இழிவுபடுத்த தேவையில்லை. நமது கொள்கையைப் பேசுவோம். கருத்துக்களைச்சொல்வோம். தஞ்சையில் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்திற்குப் பின்னர் ஜெயலலிதாவை ஆதரித்து கலைஞர் பேசியதன் மர்மம் என்ன? என்னை ஒழிப்பதற்காக யாருடனும் கூட்டுச் சேர கலைஞர் தயாராக இருக்கிறார் அரசியல் விபத்தில் முதலமைச்சர் ஆனவர் ஜெயலலிதா எனவும்தெரிவித்தார்.

# பிரதமர் விரும்பினால் பதவி துறக்க வாழப்பாடி தயாராக உள்ளார்

## -மேலிடப் பிரதிநிதி

(சென்னை)

தமிழ் நாட்டில் காங்கிரசுக் கட்சியைப் பலப்படுத்த டில்லி மேலிடம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இடைஞ்சலாகத்தான் இருப்பதாக நரசிம்மராவ் கருதினால் அப்பதவியை துறக்க தயாராக இருக்கிறேன் என்று வாழப்பாடி ராமமூர்த்தி கூறியுள்ளார்.

காங்கிரஸ் மேலிடப் பிரதிநிதி ஒருவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில், தமிழகத்தில் காங்கிரசின் வளர்ச்சியும், எதிர்காலமுமே குறிக்கோளாகக் கொண்டு நான் செயல்படுகிறேன்.அந்த அடிப்படையில் தான் அ. தி. மு. கவுடன் மீண்டும் கூட்டு சேர வேண்டாம் என்று கூறிவருகிறேன் ஆனால் அகில இந்திய காங்கிரஸ் தலைமைக்கு எதிராக நான் சதி செய்வதாக சில முக்கிய புள்ளிகள் உள்நோக்கம் கற்பித்து பிரதமரிடம் புகார் கூறியுள்ளனர். கட்சி நலன் கருதி மேலிடம் எடுக்க விரும்பும் எந்த நடவடிக்கைக்கும் நான் இடையூறாக இருப்பதாக பிரதமர் கருதினால் நான் மறுநிமிடமே பதவி விலகத் தயார் என்று வாழப்பாடி அனுப்பிய தகவலில் தெரிவித்திருப்பதாக அப் பிரதிநிதி தெரிவித்தார்.

முதல்வரும், அ. தி. மு க பொதுச் செயலருமான ஜெயலலிதாவுடன் வாழப்பாடிக்கு ஏற்பட்டுள்ள தனிப்பட்ட காழ்ப்புகாரணமாகவே அ தி மு க உறவுக்கு வாழப்பாடி எதிர்ப்பு தெரிவித்து வருவதாக தமிழகத்தைச் சேர்ந்த

# காங்கிரசை படுகுழியில் தள்ளியவர் வாழப்பாடி

## மத்திய அமைச்சர் கண்டனம்

பிரதமர் நரசிம்மராவுக்கு எதிராக கிறை நிரப்பும் போ...

...றேன்.

ஆட்டைக் கடித்து மாட்...

# சீனா உதவியுடன் பாக். டாங்கி உற்பத்தி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் இராணுவம் புதிய போர் டாங்கிகளை உற்பத்தி செய்ய சீனா உதவி வழங்கவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் ஒன்றில் இருநாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன.

இப்போர் டாங்கிகளை பாகிஸ்தான் உருவாக்க சீனா உதவும் வகையிலேயே இப் புதியஒப்பந்தம் உருவானதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

# அமெரிக்காவுடன் ரஷ்யா கடற்படை ஒத்திகை

(மாஸ்கோ)

ரஷ்யா முதல் முறையாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் நேர்வேக்...

ஆகியவையும் கலந்து கொள்ளும் இப் பயிற்சி ஐ நாவின் ஆணையின் பேரில் மேற்...

யைக் கோரியதேஆகும். இரண்டாவதாக தென்மாகாண அபிவிருத்தி பற்றியதாக இருந்தது.

ஆனால் தேர்தல் முடிவுகள், இவற்றை சிங்களமக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையே காட்டியுள்ளது. இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு, பொருளாதாரப் பிரச்சினை என்பதைவிட ஐக்கிய தேசியக்கட்சியின் எதேச்சதிகாரப் போக்கே மக்களுக்குப் பிரதான அச்சுறுத்தும் அம்சமாக இருந்துள்ளது என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தென் மாகாணத்தைப் பொறுத்து முன்னைய ஐ தே கட்சிஆட்சியாளர்கள் பல துன்ப துயரங்களுக்குக் காரணமானவர்களாக இருப்பினும்-பிரேமதாசாகாலத்தில் ஆயிரக்கணக்கானஇளைஞர்கள்கொல்லப்பட்டனர். டி பி விஜேதுங்கவைப் பொறுத்து மாகாண சபை உறுப்பினரான பிரான்சிஸ்கோவை கடத்தியமையும் எதிர் தரப்பினர் கையிலிருந்த மாகாண சபையைக் கலைத்ததுமே அவர் ஈடுபட்ட முக்கிய நடவடிக்கைகளாகும்.

ஆனால் தேர்தல் முடிவுகள் சிங்கள மக்கள் டி பி விஜேதுங்கா ஒரு ஏதேச்சதிகாரியாக வருமுன்னரே தடுத்துவிட முற்பட்டுள்ளனர். இதற்கு கடந்தகால ஏதேச்சதிகாரிகளிடம் சிக்கி தென் மாகாண மக்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் காரணமாக இருக்கலாம். அவ்வாறானதொரு நிலை மீண்டும் ஏற்படும் நிலையைத் தவிர்ப்பதற்காகவும் இருக்கலாம்.

இந்த வகையில் இத்தேர்தல் முடிவிலிருந்து டி பி விஜேதுங்கா ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இனவாத அரசியலில் தொடர்ந்தும்நம்பிக்கை கொண்டிருப்பதும் எதேச்சதிகார ரீதியில் ஆட்சியை நடத்த முற்படுவதும் ஆபத்தில் முடியும் என்பதே அதுவாகும். சிங்கள மக்கள் தற்பொழுது பேரினவாத உணர்விற்கு உட்படுவதைவிட தமது பாதுகாப்பையும் பிரச்சினைகளையும் பற்றியே அதிகம் சிந்திக்கின்றனர். எரியும் டயர்களும் புதைகுழிகளும் அவர்களுக்கு அச்சமூட்டுபவையாகவே உள்ளன.

இதேவேளை தேர்தலில் சிங்கள மக்கள் கொடுத்துள்ள ஐ தே கவிற்கு எதிரான வெளிப்படையான தீர்ப்பானது தனியாக அதற்கு மட்டும் ஒரு எச்சரிக்கை அல்ல. எதேச்சதிகார ஆட்சிக்கு இனவாதம் மூலம் ஆதரவு தேடிவிடலாம் என்ற எண்ணம் கொண்ட சிங்கள அரசியற் கட்சிகள் அதன் தலைவர்கள் ஆகிய சகலருக்கும் பொதுவானது என்பதைப் புரிந்துகொள்வது நல்லது.

பிரதமர் நரசிம்மராவுக்கு எதிராக சிறை நிரப்பும் போராட்டம் நடத்துவோம் என்று அறிவித்திருக்கும் வாழப்பாடி இராமமூர்த்தி இனி தமிழக காங்கிரஸ் தலைவராக ஒரு நிமிடம் கூட நீடிக்கக் கூடாது உடனே புதுத்தலைவரை கட்சி மேலிடம் நியமிக்கவேண்டும் என மத்திய அமைச்சர் கே. வி தங்கபாலு தெரிவித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடையே பேசிய அவர், கடந்த சில நாட்களாக தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி மத்திய அரசுதமிழகமக்களுக்குதுரோகம் இழைத்து விட்டதாகவும் வஞ்சித்து விட்டதாகவும் ஒரு தவறான செய்தியைப் பரப்பி வருகிறார். கடந்த இரண்டரை ஆண்டுகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை பெருகிவிட்டதாகவும் கூறிவருகிறார். இதுதவறு. தமிழகத்தில் ராமமூர்த்தி பிரசாரம் செய்வதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனைக் கடித்த கதையாக வாழப்பாடி தற்போது பிரதமர் ராவிற்கு எதிராகவே சிறை நிரப்பும் போராட்டத்தை அறிவித்துள்ளார் அவரின் சுயரூபம் இப்போது வெட்டவெளிச்சமாகி விட்டது. சமீப காலமாக அவர் மத்திய அரசுக்கு எதிராக இழிவாக பேசிவந்தார்.

தமிழக காங்கிரஸ் 89 இல் தனித்துப் போட்டியிட்டு 49 லட்சம் வாக்குகளும் 29 இடங்களும் பிடித்திருந்தது. அப்போது அ தி. மு கவுடன் கூட்டணி வேண்டும் என குரல் கொடுத்தவர்தான் வாழப்பாடி. அவரே இப்போது கூட்டணி கூடாது என்கிறார் காங்கிரஸ் தனித்து நிற்க வேண்டும் என்று கூறி பழனி, ராணிப்பேட்டை இடைத் தேர்தல்களில் காங்கிரசை படுகுழியில் தள்ளியவர் வாழப்பாடி என அமைச்சர் தங்கபாலு குறிப்பிட்டார்.

...மு க உறவுக்கு வாழப்பாடி எதிர்ப்பு தெரிவித்து வருவதாக தமிழகத்தைச் சேர்ந்த சில எம்பிக்கள் பிரதமரிடம் எடுத்துரைத்திருப்பது தெரிந்ததே.

---

## கருணாநிதி அராஜகம்

மயிலாப்பூர் சட்டசபை இடைத்தேர்தலில் தமக்கே உரிய பாணியில் கருணாநிதி அராஜகத்தை கட்டவிழ்த்து வருகிறார் என திமு. க (கோபாலசாமி பிரிவு) பொறுப்புக்குழுத் தலைவர் ராயபுரம் ஏழுமலை எச்சரித்துள்ளார்.

தி மு க (கருணாநிதிபிரிவு) அணி மயிலாப்பூர் பகுதியில் தி மு க(கோ. அணி) தலைமை அலுவலகம் உள்ள சென்னை ராஜா அண்ணாமலைபுரம், கற்பகம் அவென்யூவீதி முனையில் பெரிதாக வைக்கப்பட்டுள்ள பெரியார் அண்ணா, ஆகியோரின் கட்அவட்களில் சுண்ணாம்பால்கலைஞர்என்றுஎழுதியுள்ளனர் எனவும்அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்,

...அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் நேர்வேக் கடலில் கூட்டு இராணுவ ஒத்திகையை நடாத்தியுளளது

ஜேர்மனி, பிரிட்டன், நெதர்லாந்து, நோர்வே கடற்படை ஆணையின் பேரில் மேற்கொள்ளப்படும் தடைகளை அமுல்படுத்துவது குறித்து கடற்படை தயாரிப்புகளை மேற்கொள்ள பயன்படும்,

## அகதிகள் புகுவதை தடுக்க ஜேர்மன் அரசு தீவிரம்

(லண்டன்)

ஜேர்மனிக்கு தரைமார்க்கமாக வரும் அகதிகள் கைது செய்யப்பட்டு அவர்கள் எந்த நாட்டில் இருந்து வந்தார்களோ அந்நாட்டிற்கு திருப்பியனுப்பப்படவுள்ளனர்.

சுவிஸ், பிரான்ஸ், நெதர்லாந்து, போலாந்து, பெல்ஜியம், டென்மார்க் ஊடாக ஜேர்மனிக்குள் வருபவர்களை ஜேர்மன் அரசு திருப்பியனுப்பவுள்ளது. இனி விமானம் மூலம் வருவோர் மட்டுமே ஜேர்மனிக்குள் நுழைய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது

# பிரிட்டிஷ் படை தளம் மீது ஐ. ஆர். ஏ. கெரில்லாக்கள் தாக்குதல்

(லண்டன்)

பலம் வாய்ந்த பிரிட்டிஷ் இராணுவநிலை ஒன்றின் மீது ஐ. ஆர் ஏ. கெரில்லாக்கள் நடத்திய தாக்குதலில் படைவீரர்ஒருவர்காயமடைந்தார்.

குரொஸ்மக்லன் இராணுவ நிலைமீது ஐ. ஆர். ஏ கெரில்லாக்கள் மோட்டார்குண்டுத் தாக்குதலை நடத்தினர். உலங்கு வானூர்தி இறங்கும் தளத்தை நோக்கி நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் ஒரு உலங்குவானூர்தி சேதமடைந்தது. அது தீப்பிடித்து எரிந்ததாக கூறப்படுகிறது.

சமாதானத்திற்கு தாங்கள் கட்டுப்படுவதாகவும் ஆனால் ஆங்கிலோ - ஐரிஷ் சமாதான திட்டத்தில் மேலும் சலுகை அளிக்கப்பட வேண்டும் என ஐ ஆர் ஏ. அறிவித்து ஒரு வாரத்தில் இத்தாக்குதல் நடந்துள்ளது. ஐரிஷ் குடியரசுடன் எல்லையைக் கொண்ட குரொஸ் மக்லன் தளம் அடிக்கடி ஐ ஆர். ஏயின் தாக்குதலுக்கு இரையாகி வருகிறது. லண்டன் ஹீத்ரோ விமான நிலையம் கடந்த வாரம் மூன்று தடவை ஐ. ஆர். ஏ. தாக்குதலுக்கு இலக்கானது குறிப்பிடத்தக்கது.

70 ஆண்டுகளுக்கு முன் அயர்லாந்தில் இருந்து பிரிக்கப்பட்ட வடபகுதி மீண்டும் ஐரிஷ் குடியரசுடன் இணைவதை பிரிட்டன் ஆட்சேபிக்காது என்றும் ஆனால் வட அயர்லாந்தில்உள்ளபுரட்டஸ்தாந்து பெரும்பான்மையினரின் சம்மதமின்றி அப்படிச் செய்யமுடியாது என்றும் ஐரிஷ் - ஆங்கிலோ சமாதான த்திட்டம் கூறுகிறது.

அயர்லாந்தை ஒன்றிணைக்க புரட்டஸ்தாந்துகள் மீது பிரிட்டன் தனது அரசியல் பொருளாதார சக்தியை உபயோகித்து அவர்களை ஐக்கியத்திற்கு இணங்கச் செய்ய வேண்டும் என ஐ. ஆர். ஏயின் அரசியல் பிரிவான சின்பீன் கூறுகிறது.

## வடகொரியாவை மிரட்ட அமெரிக்கப் படை ஒத்திகை

(வாஷிங்டன்)

வட கொரியாவின் அணு ஆயுத திட்டம் சம்பந்தமான பிரச்சினையில் நல்ல முடிவு ஏற்படாவிட்டால் அமெரிக்கா தென்கொரியாவுடன் தனது இராணுவ ஒத்திகையை மீண்டும் தொடரவுள்ளது.

ஒத்திகையை எப்போது ஆரம்பிப்பது என்பது குறித்து தென்கொரியாவுடன் ஆலோசனை கலக்கப்படும்என அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

தென்கொரியாவில் அமெரிக்கப் பாதுகாப்பை பலப்படுத்த எப்போது பெட்ரியட் ஏவுகணைகளை அனுப்புவது என்பது குறித்து தென்கொரியாவுடன் ஆலோசனை நடைபெறுகிறது.

## பிரிட்டனுக்கு மன்னிப்புச்சபை கண்டிப்பு

பிரிட்டனில் புகலிடம் கோரி வந்தவர்களை நடத்தும் முறை குறித்து மனித உரிமைகள் இயக்கமான சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

ஆசியா, ஆபிரிக்கா தென் அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 180 பேர் உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருகின்றனர், புகலிடம் தேடி பிரிட்டன் வந்தும் இந் நாட்டவர்கள் தடுப்பு முகாம்களில் தாம் துன்புறுத்தப்படுவதாக கூறி அண்மையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர், தாம் கைதிகள் போல் நடத்தப்படுவதாக இவர்கள் கூறினர்.

புகலிடம் கோரி வந்திருப்பவர்களின் விவகாரத்திற்கு ஒரு முடிவு ஏற்படுத்தும்படி பிரிட்டிஷ் உள்துறை அமைச்சருக்கும் சம்பந்தப்பட்ட உள்துறை விவகாரத்திற்கு பொறுப்பானவர்களுக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை விடுத்துள்ளது,

# எமது கொள்கையை வெளியிட நாம் தயங்கப்போவதில்லை

**- சந்திரசேகரன்**

(கொழும்பு)

எமது அரசியல் பாணம் ஜனநாயக ரீதியிலானது. அதேவேளை எமது கருத்துக்களை, கொள்கைகளை முன் வைப்பதற்கு நாம் தயங்கப் போவதும் இல்லை; குறுகிய லாபத்திற்காகவோ, சுயநலத்திற்காகவோ எமது கொள்கையில் இருந்து நான் அணுவும் மாறமாட்டேன் என்று உங்கள் மத்தியில் உத்தரவாதம் அளிக்கிறேன்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரான பெ. சந்திரசேகரன் பிணையில் விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தலவாக்கொலையில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்;

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; நீங்கள் இவ்வளவு பெருந்திரளாகவும், உணர்ச்சியோடும் என்னை வரவேற்பதற்கு இங்கு திரண்டு வந்திருப்பது எனக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகின்ற அதேவேளை எனது எதிர்கால அரசியல் கடமைகளை எனக்கு உணர்த்துகின்ற சந்தர்ப்பமாகவும் அமைகின்றது.

நான் சிறையில் இருந்த காலங்களில் எனது முகத்தை கூட பார்க்க முடியாத சந்தர்ப்பத்திலும் கூட எனக்கு ஆதரவளித்து என்னை மாகாணசபைத் தேர்தலில் வெற்றியடையச் செய்தவீர்கள். இது என் மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் எமது அரசியல் கொள்கைகளுக்கு மக்கள் அளிக்கும் அங்கீகாரத்தையும் காட்டுகிறது'

உங்கள் நம்பிக்கைகளை எதிர்பார்ப்புகளை ஈடுசெய்வதே எனக்குள்ள உடனடி அரசியல் கடமை என்று கருதுகிறேன்; அந்தச் சேவை மட்டுமே என் அரசியல் வாழ்வை அர்த்தமுள்ளதாக்கும். உங்கள் நம்பிக்கைக்கு துரோகம் இழைத்தால் என்னுடைய அரசியல் எதிர்காலத்தை நான் நாசமாக்கிக்கொண்டதாகவே முடியும். இதை நான் உணர்கிறேன் எனவும் தெரிவித்தார்

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயக மண்ணில்!
05 - 02 - 1965

தாயக மீட்பில்!
26 - 03 - 1987

**வீரவேங்கை மனோ**
**[நாகலிங்கம் மனோரஞ்சன்]**
புங்குடுதீவு - 7

மண்ணின் மீட்பு ஒன்றே
எண்ணத்தில் நிறைந்ததால்
உறவை ஊரை உற்றாரை
துறந்து இணைந்தாய் படையணியில்
இலட்சியம் ஈடேறும் நாள்வரையில் - நீ
தாங்கிய கருவி தூங்காது - இது உறுதி

3/1, 1-வது ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்

(7852)

## மரண அறிவித்தல்கள்

## வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நாவண்ணனின் அரங்கக் கவிதைகளைக் கொண்ட 'பொழிவு' நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு புனித அடைக்கலமாதா ஆலய ஜெறோ மண்டபத்தில் நடைபெறவுள்ளது;

கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இவ் வெளியீட்டு நிகழ்வில் வெளியீட்டு உரையை அகில இலங்கை கம்பன் கழகத்தைச் சேர்ந்த திரு. இ. ஜெயராஜ் நிகழ்த்தவுள்ளார்;

## புகையிரத ஒய்வூதிய வவுச்சர்

(யாழ்ப்பாணம்)

புகையிரத உள்ளூராட்சி திணைக்கள ஒய்வூதியர்களுக்கான ஒய்வூதிய வவுச்சர்கள் 30 ஆம் திகதி அனுப்பி வைப்பதற்கு அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தற்போது கொழும்பில் தங்கியுள்ள அரசாங்க அதிபர் இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

### ஹெலி

பரயபில் இரவு பகலாக கடற்படையினரின் விசைப்படகுரோந்துச் சேவையும் உலங்கு வானூர்தியின் நோட்டமும் இணைந்தவாறு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. படையினரின் இந்நடவடிக்கையினால் மீனவர்களின் தொழில் வாய்ப்பும் முற்றாக பாதிக்கப்பட்டு வருவதாகவும் அறியமுடிகிறது! (போ)

### வடிக்கை

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட வங்கிகள் தமக்கான நட்ட ஈட்டுத் தொகையைப்பெற்று வாடிக்கையாளருக்கும் ஈட்டுத் தொகையை வழங்க வேண்டும் என்றும் வங்கிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட உள்ளது. (க,தி)

உ

## பெரியதம்பிரான் வருடாந்த உற்சவம்

அன்புடையீர்,

இமையாணன் உடுப்பிட்டியில் எழுந்தருளிய பெரிய தம்பிரான் ஆலய (சிவன்) வருடாந்த உற்சவம் 27-03-94 ஞாயிறு தொடக்கம் கொடியேறி, 4-04-94 தேரும், 5-04-94 காலை 10-00 மணிக்கு தீர்த்தமும், மாலை 7 மணிக்கு திருமண வைபவமும், கொடி இறக்கமும் நடைபெறும் என அடியார்கள், ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேன்;

- எம். பி. தருமலிங்கம்

(சி 8925)

## பரதநாட்டிய அரங்கேற்றம்



## மலேரியா நோயினால் பாதிப்புறுவோர் அதிகரிப்பு

(தென்மராட்சி)

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் மூளை மலேரியா நோயினால் பெரும் தொகையானநோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பளை அரசினர் வைத்தியசாலையின் புள்ளி விபரப்படி 1-3-94 இல் இருந்து 19-3-94 வரையும் மூளை மலேரியா நோயினால்33 பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர் என கூறப்படுகின்றது இதே நாட்களில் மலேரியா நோயினால் 409 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் இவ்வாண்டு ஜனவரியில் மூளை மலேரியாவினால் 27பேர்பாதிக்கப்பட்டனர்பின்னர் பெப்ரவரியில் 18 பேரும் பாதிக்கப்பட்டனர் தற்போது ஒன்பது நாட்களில் மட்டும் 33 பேராக அதிகரித்துள்ளது

இவ்நோயாளிகள் தினமும் கிளாலி, பண்டிதர்குடியிருப்பு, கெற்பலி, மிருசுவில், செம்பியன்பற்று, உடுத்துறை போன்ற இடங்களில் இருந்தே கூடுதலாக வருகின்றனர். இதே வேளை மருத்துவமனையில் மருந்துகள் தட்டுப்பாடு நிலவியுள்ளதுபலபோல் கூட அங்கு இல்லாமல் இருப்பதாக கூறப்படுகின்றது (86)

## விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். சம்பத்திரிசியார் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான எட்டாவது ''ராஜன் கதிர்காமர் வெற்றிக்கேடயத்துக்கான'' 50 ஓவர் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் ஆட்டம் இன்று காலை 8 30 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி ''பிக்னெல்'' மைதானத்தில் இடம்பெறவுள்ளது; (07)

### பிரான்சிஸ்கோ

களிலும் அக்கட்சி தோல்வியைக் கண்டது.

இதே வேளை விருப்பத்தெரிவு வாக்கின் மூலம் விமல் பிரான்சிஸ்கோ தெரிவாகவில்லை. தெற்கு தேர்தலில் வெற்றிபெற வடக்கு யுத்தத்தையே முன்வைத்தார். அவர் தனக்கு வாக்களிப்பின் அது ஈழம் பெறுவதை தடுத்து நிறுத்தும் என கூறிய போதிலும் அதனை தேர்தல் பிரச்சாரமாக மக்கள் ஏற்கவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்-

### சிங்கள

சேதமடைந்து தாம் தத்தளிக்கையில் தமது அருகே படகு வந்ததாகவும் தாம் ஆபத்து சைகை காட்டியதை தொடர்ந்து அ படகு அருகே வந்து தமக்கு உதவி செய்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது;

### நரோமா

7ஆம் திகதி ''நரோமா'' கப்பலில் பிரயாணம் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது;

## கூட்டம்

மாட்டு வண்டில் சவாரி சங்கம் அமைப்பதற்கான கூட்டமொன்று கோண்டாவில் அரசியல் துறை மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது; இதில் யாழ் மாவட்டத்திலுள்ள சகல சவாரி மாட்டு உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுக் கொள்கின்றது.

## அரசும் சர்வோதயமும் நகமும் சதையும் போன்றது

(கொழும்பு)

அரசாங்கமும் சர்வோதயமும் தற்போது நகமும் சதையும் போன்றது. ஆனால் அரசாங்கத்துடன் இவ்வாறு ஒன்று இணைவது அவ்வளவு ஓர் நல்ல காரியம் அல்ல இப்படி நெருங்குவதைவிட எமது கொள்கையை நாம் பாதுகாப்பதே சாலச்சிறந்தது என சர்வோதயதலைவர் கலாநிதி ஆரியரட்ணா தெரிவித்துள்ளார்.

மகாவலி 'ஜ' பிரிவு தெல்தெனிய பிரிவு வைபவம் ஒன்றில் பேசும்போதே ஆரியரட்ணா இவ்வாறு தெரிவித்துள்ளார்;

## மக்களின் தீர்ப்பிற்கு தலை வணங்குகிறோம்

**- சிறிசேன குரே**

(கொழும்பு)

தென் மாகாண மக்கள் அளித்த தீர்ப்புக்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தலை வணங்குவதாகவும், மக்களின் தீர்ப்பை தனது கட்சி மகிழ்ச்சியுடன் ஏற்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி பொதுச்செயலாளரும் அமைச்சருமான சிறிசேன குரே தெரிவித்துள்ளார்.

வெரித்தாஸ் வானொலிக்கு அளித்த பேட்டியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து தெரிவிக்கையில் தோல்விகள் தமக்கு பழக்கப்பட்டவை என்றும், எந்த முறையும் வெற்றியீட்டி அதனை ரசித்துக் கொண்டிருக்க முடியாது என்றார்

### ஐ. ஐ. தேசிய

பட்டுள்ளதாக கடைசியாக கிடைத்த தகவல் தெரிவிக்கின்றது.

மேற்படி கட்சியின் பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆறு வேட்பாளர்கள் மட்டுமே நிறுத்தப்பட்டதாக அவ் வட்டாரம் மேலும் தெரிவித்துள்ளது;

### எதிர்

பட முடியாமல் போனதாகவும் அத்துடன் தென்மாகாண மக்கள் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக வீதியில் இறங்கி நடத்திய போராட்டத்திற்கு வன்முறையாதிகளினால் முகம் கொடுக்க முடியாமல் போனதினாலேயே இத்தேர்தலில் தாம் வெற்றி பெறமுடிந்தது என்றார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் கட்சிக்கு கிடைத்த வெற்றி என்பதை விட மக்களுக்குக் கிடைத்த ஒரு வெற்றியென்றே கூற முடியும் என்றார்;

### கட்சி

வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாக மேலும் தெரிய வருகின்றது

### தொடங்கொடா

பக்ச ஆகக் கூடிய விருப்ப தெரிவு வாக்கும், மாத்தறை மாவட்டத்தில் பொதுஜன ஐக்கியமுன்னணியின் சார்பில் போட்டியிட்ட ஜனநாயக ஐக்கியமுன்னணியின் வேட்பாளர் ஜாக்அழகப் பெருமாவுக்கு அதிகூடிய விருப்பு தெரிவு வாக்குகிடைத்துள்ளது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## கந்தையா கணபதிப்பிள்ளை

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் குருநகர் பாஷ்சால் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கணபதிப்பிள்ளை 25-3-94 அன்று அகால மரணமானார். இவர் இலைத்தின் அன்புக் கணவரும் சிவதாசன் (மல்லாவி), கவிதாசன், கண்ணதாசன், வரதராசன், பாரதிதாசன், றாஜினி சுகந்தினி, ஜேந்தினி(இந்தியா). சிவாஜினி, பிறேமினி ஆகியோரின் அன்புத் தந்தையும், அற்புதமலர் (மல்லாவி), காலஞ் சென்ற செல்வரட்ணம், சிவகலை, கமலேந்திரவதி, சந்திரமோகன் (C M. சுகந்தினி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் K. K. S வீதி) விக்கினேஸ்வரன் (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். புவிதாசன், சிவபாலன், முகுந்தினி, லுகிர்தா பகிர்தா, தாக்சாயினி, விஜிதரன், சுஜிதரன், சுதாகரன், பபிதரன், கீதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம், இறுதிக் கிரியை பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

113 பாஷ்சால் வீதி, (பிறின் பேக்கரி அருகாமை) குருநகர், யாழ்ப்பாணம்.

தகவல்
சந்திரமோகன் (மருமகன்)
(C. M. சுகந்தினி உரிமையாளர்)

7851

## விசுவலிங்கம் நடராசா
(ஆரியகுளம் சந்தி பேப்பர் கடை)

66, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக்கொண்ட விசுவலிங்கம் நடராசா 23-03-1994 அன்று காலமாகிவிட்டார். இவர் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், யோகராசா விஜயராணி (ராணி), பரமகிரிநாதன் (நாதன்), அருணகிரிநாதன் (அருணா), விமலராணி (விமா), செல்வநாதன் நகுலராணி (ஜெயா), நிர்மலராணி (பவானி), ஈஸ்வரநாதன் (ஈசன்), யோகராணி (தயா), செல்வநாதன் (ரகு) ஆகியோரின் தந்தையுமாவார். அன்னாரின் தகனக்கிரியைகள் 27-03-94 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்,

66, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(7849)

தகவல்:
ந. பரமகிரிநாதன் (மகன்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



## செல்வி ஜனித்திரா சோமசூரியசிங்கம்
(உடுவில் மகளிர் கல்லூரி மாணவி -
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவி)
யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவு
நடன விரிவுரையாளர் திருமதி சிறிஷ்சாந்தி இரவீந்திராவின் மாணவி

**இடம்: இளங்கலைஞர் மன்றம், நல்லூர்**

**காலம்: 27-03-94 மாலை 3-45 மணி**

பிரதம விருந்தினர்: திரு. S. கனகரத்தினம் J.P., U.M.
அரச சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிஸ்
திருமதி சரஸ்வதி கனகரத்தினம்

சிறப்பு விருந்தினர்: திரு. புதுவை இரத்தினதுரை
பொறுப்பாளர் கலை பண்பாட்டுக் கழகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
திரு. மா. மாணிக்கவாசகர்
அரச அதிபர், யாழ்ப்பாணம்

தயாரிப்பு: **நாட்டிய கலாகேந்திரா**

(இ-8919)

தற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

எனவே இவர்கள் அன்றைய தினம் பருத்தித்துறை இறங்குதுறைக்கு தவறாது சமுகமளிக்கும்படி யாழ். செயலக மேலதிக அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

பொ ஐ

எதிரணியினர் ஐம்பது சதவீத வாக்குகளைப் பெற்றிருப்பது இத்தேர்தலிலேயே எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தேர்தலில் ஐ தே. க. 43 91 சதவீத வாக்குகளையும் நவசமசமாஜக் கட்சி 1·13 சதவீத வாக்குகளையும் பெற்றனர்.

## வாகன இலக்கங்கள்
## 25-03-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1422

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-
28-6546, 27-6762, 42-9220, 42-1182, 27-5217, 24-9645, 41-9111, 26-0573, 26-0423, 28-3233, 26-0767, 26-4627, 28-2829' 26-8746, 24-5036, 24-1724.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-
26-5848, 27-4023, 42-0169, 24-6855, 27-0493, 26-1791, 24-8444 24-6489, 27-2088, 22;8754, 43-1019 43-4170, 27-1939, 42-1754, 43-3854, 41-1531, 26-4323, 28-1185, 26-9626, 26-3063, 22-8835, 28-0854.

உ
சிவமயம்

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருடம் பங்குனித் திங்கள் 14-ம் நாள் (27-03-1994) ஞாயிற்றுக்கிழமை பகல் 9-10 மணி முதல் 11-00 மணி வரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எனது புத்திரன்
திருநிறை செல்வன்
**உதயகுமார்**
(உரிமையாளர், உதயன்ஸ் வாச் வேக்ஸ் 100, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்)
அவர்களுக்கு

எனது புத்திரி
திருநிறை செல்வி
**யோகராணி**
அவர்களை

இறைவன் திருவருளால்' யாழ். மணிக்கூட்டு வீதி ரசிக ரஞ்சன சபா மண்டபத்தில் (பெருமாள் கோவில் அருகாமை) திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இருவீட்டார் அழைப்பு)

மணமகன் இல்லத்தில் 28-03-94 மாலை 4-00 மணிக்கு வரவேற்பு உபசாரம் நடைபெறும்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம்
(தாயார்)
திரு. திருமதி துரையப்பா அரசரட்ணம்
(சகோதரர்)
பெரிய மதவடி,
உடுவில் கிழக்கு, சுண்ணாகம்.

திரு. அ பொன்னுத்துரை
(தகப்பனார்)
(வேலணை-3)
168, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி-8924)